

# கே.ஜே. யேசுதாஸ்

# ஐயப்பன் பாடல் வரிகள்

WWW. TAMILGOD .ORG

## சுப்ரபாதம் சுவாமி பள்ளி எழுந்தருள்வாய்

சுப்ரபாதம் சுவாமி பள்ளி எழுந்தருள்வாய்
சத்யமாம் பொன்னின் பதினெட்டாம்
படியின் தத்துவமே
சத்யமாம் பான்னின் பதினெட்டாம்
படியின் தத்துவமே
சின்மய ரூப சிகாமணியே
சத்யமாம் பொன்னின் பதினெட்டாம்
படியின் தத்துவமே
சின்மய ரப சிகாமணியே
அத்யான மகற்றும் மெய்ஞானமே (சுப்ரபாதம்)

அஷ்டதிக் பாலகர் ஊதிய சங்கு நாதம்
ஐயனின் பள்ளியுணர்த்திடவே
அஷ்டதிக் பாலகர் ஊதிய சங்கு நாதம்
ஐயனின் பள்ளியுணர்த்திடவே
ஆகாச சங்கருடன் பூபாளம்
தேனோடு மலரும் பன்னீரும் நல்கி சுவாமி
அடியனின் மனசாம் கடலிலே திரைகள்
அய்யனின் பாதத்தில் அர்ச்சித்தேன்
பூனுகு சவ்வாது சந்தனம் நெய்வேத்யம் (சுப்ரபாதம்)

இந்திராதி தேவர்கள் நட்சத்திர பூக்களால்
பொற்பாதம் மீதினில் அர்ச்சனையும்
இந்திராதி தேவர்கள் நட்சத்திரப் பூக்களால்
பொற்பாதம் மீதினில் அர்ச்சனையும்
பூலோகம் தன் கையில் செந்தாமரை
நானொரு இதழாய் மணமாவேன் சுவாமி
அடியனின் கண்களில் ஆனந்த நீர்த்துளிகள்
அய்யனுக்கு ருத்ராட்சமாகனும்
பொன் ஐயப்பன் என் இதயக் கோயிலிலே (சத்யமாம்)

==========================================================================

## கனிவோடு நமை இழுக்கும் காந்தமலை

கனிவோடு நமை இழுக்கும் காந்தமலை
மணிகண்டன் வாழும் உயர்ந்தமலை சபரிமலை (கனிவோடு)

ஓங்கார நாதமெனும் வேதமலை - அன்பர்
ஒற்றுமையாய் *நாமம் சொல்லும் தெய்வமலை* (கனிவோடு)

தேவேந்திரன் புலியாக தேவர்களும் கூடவர
தெய்வமகன் பவனி வந்த சபரிமலை
தேவேந்திரன் புலியாக தேவர்களும் கூடவர
தெய்வ மகன் பவனி வந்த சபரிமலை
கண்ணில்லார்க்கு கண் கொடுக்கும் சாந்திமலை

பேசாத பிள்ளைகளை பேசவைக்கும் தெய்வமலை (கனிவோடு)

காத்திருந்தாள் பக்தசபரி கானகத்தில் ஆவலாக
பொன்மாமலை ஹரிஹரசுதன் தனக்கு மோட்சம் நல்கிட
காத்திருந்தாள் பக்தசபரி கானகத்தில் ஆவலாக
பொன்மாமலை ஹரிஹரசுதன் தனக்கு மோட்சம் நல்கிட
ஜோதியாகி சபரி மோட்சம் தந்த தெய்வம்
சொன்னான் தான் வாழும் புனிதத்தலம் சபரிமலை ( கனிவோடு)

---

## வில்லெடுத்து விளையாடும் தெய்வமே

வில்லெடுத்து விளையாடும் தெய்வமே - பக்தர்
இதயமாம் நீலவானில் - மன
வில்லெடுத்து தத்துவம் சொன்னவனே
பலநிறம் சேர்ந்து தான் மனவில்லென்பது
மன ஒற்றுமை ஒன்றுதான் ஜெயமந்திரம்
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா (வில்லெடுத்து)

உடல் தந்தாய் உயிர் தந்தாய் அறிவும் தந்தாய்
உதவாத ஆணவத்தை ஏனோ தந்தாய்
உடல் தந்தாய் உயிர் தந்தாய் அறிவும் தந்தாய்
உதவாத ஆணவத்தை ஏனோ தந்தாய்
அளவில்லா ஆசைகளை மணிகண்டா நீ
அளவில்லா ஆசைகளை மணிகண்டா நீ - எங்கள்
குறை நீக்கிடு ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா (வில்லெடுத்து)

கல்லாகும் சொல்லாலே மனிதரை வாட்டும்
நல்வழி செல்லா மனமும் சினத்தைக் கூட்டும்
கல்லாகும் சொல்லாலே மனிதரை வாட்டும்
நல்வழி செல்லா மனமும் சினத்தைக் கூட்டும்
இனி உன்னருளாலன்றோ மனிதரின் நிலை
இனி உன்னருளாலன்றோ மனிதரின் நிலை இங்கு
நீ தீமைகளை கொய்திடுவாய் ஐயா சரணம் ஐயப்பா
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா (வில்லெடுத்து)

==========================================================================

## பூத நாயகன் ஐயப்பன்

பூத நாயகன் ஐயப்பன் - இந்த
பூமி அரசாளும் மெய்யப்பன் (பூத)

வேதாந்த பல யோகியவன் - உயர்
வெற்றிகளை தந்திடவே வந்தப்பன்
வேதாந்த பல யோகியவன் உயர்
வெற்றிகளை தந்திடவே வந்தப்பன் (பூத)
பஞ்சகல நாயகன் பக்தருக்கனுகூலன்
நெஞ்சார நினைப்போர்க்கு நேசனவன்
பஞ்சகல நாயகன பகதருககனுகூலன
நெஞ்சார நினைப்போர்க்கு நேசனவன்
வஞ்சகரை நல்வழியில் ஆக்குவோன்
மன்மந்தவ புத்திரனவன் தத்வம் நிறை
மாயாமயன் மணிகண்டா நின் திருவடி சரணம்
ஜோதிமய சரணம் சுந்தரனே சரணம் (பூத)

அன்னை சொல் மதித்தவன் அஞ்சாத பாலகன்
வீரனாகப் புலி மேலே வந்தவன்
அன்னை சொல் மதித்தவன் அஞ்சாத பாலகன்
வீரனாகப் புலி மேலே வந்தவன்
தண்டில் நானொளியை கணவனாக ஆக்குவோன்
சித்தர் சொல் வித்தைகளை நித்தம் பல
பக்தருக்குள் எந்தன் குருவே நின் திருவடி சரணம்
முக்தி பழம் சரணம் முத்தே அருள் சரணம்
நித்யாநிதி விளங்கும் படி சரணம் சரணம் (பூத)

==============================================================================

## சரங்குத்தி ஆலே நீ சாட்சி

சரங்குத்தி ஆலே நீ சாட்சி -சபரி
பீடமே நீ சாட்சி
தஞ்சம் என்றோர்க்கு தாயினும் சிறந்தவன்
தாரகப் பிரம்மமே ஐயப்பா - சுவாமி ஐயப்பா (சரங்)

சூர்ய வில்லினை தோளில் அணிந்தவன்
தூளியாலே அம்புகள் எய்தும் மனசாம்
கொடும் காட்டில் வேட்டையாடிட சுவாமி
மணிகண்டன் மகிமை பொன்சரம் தொடுத்தான்
மனசாம் கொடும் காட்டில் வேட்டையாடிட சுவாமி
மணிகண்டன் மகிமை பொன்சரம் தொடுத்தான்
கரிபுலி நரிகளாம் காம குரோதங்களை
பல திரை எய்து வீற்றிடவே - எந்தன்
விழிகளில் ஐயனின் திருவுருவம் (சரங்)

சந்திரனாம் வட்ட பரிசையணிந்து
சந்தனம் பொட்டு பள்ளி பாலினில் தெளித்து
சந்திரனாம் வட்ட பரிசையணிந்து
சந்தனம் பொட்டு பள்ளி பாலினில் தெளித்து
கனககேசரிகளாம் வாகனங்களில் ஐயன்
கலியுக காடுதேடு வந்தானே
இடி மின்னல் உருமிகள் துரத்திடும் சுவாமி
இடி மின்னல் உருமிகள் துரத்திடும் சுவாமி - எந்தன்

இருள் நெஞ்சில் வேட்டையாடினான்
அன்றே இருள் நீங்கி அளிமயமானதே (சரங்)

==================================================================

## ஆகாசமாம் புள்ளி புலிமேல் பவனியாய்

ஆகாசமாம் புள்ளி புலிமேல் பவனியாய்
ரோகாதி மாற்றிடும் சுவாமி (ஆகாசமாம்)
கபடமாம் ரூபத்தின் தலைவேதனைக்கவன்
தருமருந்து புலிப்பாலு (கபடமாம்)
தரணிக்கு தன்வந்த்ரி ஞானமூர்த்தி (ஆகாசமாம்)

அறியாத தீவினை பாவச்சுவடாகி
மனிதரை வாட்டிடும் ஜென்மம்
அறியாத தீவினை பாவச்சுவடாகி
மனிதரை வாட்டிடும் ஜென்மம்
ஐயன் கடைக்கண்ணால் நம்மை காத்திடும்
நல்லவன் பாரோரால் போற்றிடும் ரூபனாம்
ஐயன் கடைக்கண்ணால் நம்மை காத்திடும்
நல்லவன் தீதான ஆணவத்தின் ரூபனாய்
மகிஷி மர்தனன் செய்தான் அன்பு
மனிதாபிமானமுள்ள தெய்வம் (மகிஷி)
சமதர்மத்தின் ரூபமே சரணம் (ஆகாசமாம்)
கேட்டு நடுங்கிடும் வன் கோரரூபங்களை
வேட்டையாடி நமை காக்கும் சுவாமி
கேட்டு நடுங்கிடும் வன் கோர ரூபங்களை
வேட்டையாடி நமை காக்கும் சுவாமி
நவசக்தி மணி வில்லின் நாணொளி கொண்டவன்
நாட்டின் நலம் காக்கும் சுவாமி
நவசக்தி மணிவில்லின் நாணொளி கொண்டவன்
நாட்டின் நலம் காக்கும் சுவாமி
சத்ய தர்மமதை குடிவைக்க வந்தவன்
சானித்ய மூர்த்தியே சரணம்
சத்ய தர்மமதை குடிவைக்க வந்தவன்
சானித்ய மூர்த்தியே சரணம்
அருள் நித்திய சொரூபமே சரணம் (ஆகாசமாம்)

==================================================================

## கலியுக தவயோகி ஞானமூர்த்தி

கலியுக தவயோகி ஞானமூர்த்தி - திலா
கலபத்தி லாராடும் சக்ரவர்த்தி (கலியுக)

தாரகைப் பூக்களால் புடை சூழும் பகவானின்
தாரகைப் பூக்களால் புடை சூழும் பகவானின்
அர்ச்சனை மந்திரம் அருள்நிதியே (கலியுக)

கார்த்திகை பௌர்ணமி மணம் வீசும் திருநீரால்
கலியுக மூர்த்திக்கு அலங்காரம் (கார்த்திகை)

நம்பிடும் அடியவரின் உள்ளொளி மேடையில்
நம்பிடும் அடியவரின் உள்ளொளி மேடையில்
வீரத மகத்துவம் சுதி மீட்டும்
உண்ணாமனுசி ஐயப்பா உள்ளம் இனிக்குது ஐயப்பா
உண்ணாமனுசி ஐயப்பா உள்ளம் இனிக்குது ஐயப்பா
ஒளியாய் உயிராய் ஒளியாய் உலகாய்
ஒளியாய் உயிராய் ஒளியாய் உலகாய்
ஒப்பிலா மணியான நீ சுவாமி (கலியுக)

இந்திராதி தேவர்கள் ஐயன் திருநடையில்
கற்பூர ஆவிகூட்டி கைதொழுவார் (இந்திராதி)

இருவினையைக் காலம் இருமுடிக் கட்டாக்கி
இருவினையைக் காலம் இருமுடிக் கட்டாக்கி
இடிமேள தாளத்தில் படி பூஜை
மனதில் விளையாடும் மைப்பா மகரஜோதி நீ ஐயப்பா
மனதில் விளையாடும் மைப்பா மகரஜோதி நீ ஐயப்பா
தலையாய் மொழியாய் கவியாய் இசையாய்
தலையாய் மொழியாய் கவியாய் இசையாய்
பதினெட்டுப்படி தத்வமே சுவாமி (கலியுக)

================================================================================

## கருணையோடு அணைக்கின்ற கையேது

கருணையோடு அணைக்கின்ற கையேது - கொடும்
காட்டில் நமை வழிகாட்டும் பொருளேது (கருணை)

பம்பையாற்றில் புனிதமான குளிரேது - நமை
பாட்டுப் பாடி தாலாட்டும் அன்னை ஏது
ஐயப்பன் சுவாமி ஐயப்பன்
ஐயப்பன் சுவாமி ஐயப்பன் ( கருணை)

பந்தளத்தில் பெருமை சேர்த்த புண்யமேது - நோன்பால்
பக்தரை சுவாமியாக்கும் உருவமேது (பந்தளத்)

சம்சாரக் கடலினிலே தோணியேது
சம்சாரக் கடலினிலே தோணியேது
பாவ சுவடுகளைச் சுட்டெரிக்கும் அக்னியேது
ஐயப்பன் சுவாமி ஐயப்பன்
ஐயப்பன் சுவாமி ஐயப்பன் ( கருணை)

ஜாதிமத பேதமில்லா சமத்துவ தீபம் - காட்டி
மனிதர்களை புனிதராக்கம் மகர தீபம் (ஜாதி)

சைவ வைஷ்ணவங்கள் ஒன்றாய் இணைத்து சேர்க்கும்
மகா சன்னிதானம் சானித்ய மனதில் சேர்க்கும்

ஐயப்பன் சுவாமி ஐயப்பன்
ஐயப்பன் சுவாமி ஐயப்பன் ( கருணை)

=============================================================================

## மாயே மாயே நீயொரு மாளிகை புரத்தம்மா

மாயே மாயே நீயொரு மாளிகை புரத்தம்மா
இரவும் பகலும் இருமுடியைக் கட்டி
மலைப்பயணம் தொடர்கின்ற பொருளே (மாபே)

மாதவ சீலராம் குருசுவாமிமார் நின்று
மந்திரம் சொல்கின்ற மலையில்
அவதூத மாருதன் நெஞ்சில் நெருப்போடு
அஷ்டகங்கம் புகைத்தலை நின்றான் (மாயே)

திருமாமலையில் பாதபலம் தரும்
ஐயனின் திருநாம மந்திரம்
இயற்கை நுழையில் வைத்தூதிய
பொன்னிற உதயங்களணிபவளே (மாயே)

மகரவிளக்கொளி சபரிமலையில் நம்
மனசாட்சி உணர்த்தும் ஒளியே
சுவாமி திருப்படி மகத்துவமோ உன்
சாதுபாடகன் பாக்கியமோ (சுவாமி (மாயே)

=============================================================================

## பக்த சபரியின் இதயம் ஒரு

பக்த சபரியின் இதயம் ஒரு
நூறு இதழ்க் கமலம் (பக்த)

அதில் சுவாமியின் நாமங்கள் பலலட்சம் உருவிலும்
அதில் சுவாமியின் நாமங்கள் பலலட்சம் உருவிலும்
சரணமய்யப்பா மந்திரம் - சுவாமி
சரணமய்யப்பா மந்திரம் (பக்த)

மனதால் யாகத்தில் குண்டலியை தீமூட்டி
யாகத்தில் எரிபொருள் முன்வினைகள் (மனதால்)

வேள்வி புகை கரிமலையிலுருவாகி
அய்யன் அருளின் திருஅருளே (வேள்வி)

மகர விளக்கின் ஒளியானது (பக்த)

அன்பு மலரை பக்தி அமுதுடன் ஆண்டவன்

முன்னில் நான் படைக்க (அன்பு)

இதய தாமரை மீதினிலே ஐயன்
ஐயப்பன் அமர்ந்திடுவான் (இதய)

ஒளி பிரணவ மணி நாதம் (பக்த)

==========================================================================

## ஆழி பூஜைக்கு கற்பூரம் கொண்டு

ஆழி பூஜைக்கு கற்பூரம் கொண்டு வரும்
ஆகாய பவனி வரும் மேகங்களே
ஆகம சமத்துவ பிரணவ சொரூபன்
ஆனந்த திண்மயரூபன்
ஐயனின் திருப்பாதம் தொழுதி வேண்டும் (ஆழி)

அழுதையில் ஐயனை தொழுதால் பின்னே
எரிமேலி வாபரைத் தொழுவாய் (அழுதை)

அம்பலர் குலப்பட்ட ஆலங்காட்டாரின்
ஆவேச பேட்டை துள்ளல் பார்க்க வேண்டும்
அம்பலர் குலப்பட்ட ஆலங்காட்டாரின்
ஆவேச பேட்டை துள்ளன் ஆனந்தமே (ஆழி)

பம்பா தீரத்தில் விரியும் தீர்த்தமும்
பம்ப விளக்குகள் பரவசமே (பம்பா)

சன்னிதானத்தில் பொன்னாதிக்க சந்திரனும்
ஒளி நெய்யால் அபிஷேகம் பார்த்ததுண்டோ (சன்னி) (ஆழி)

திரு ஆபரண வரவில் குடையாய் கருடன்
வானத்தில் வருவான்
மகர ஜோதியின் மகாதத்துவத்தை
மனதில் பொன்னம்பல மேடு காட்டும் (மகர)

மனதும் பொன்னம்பல மேடாகுமே (ஆழி)

==========================================================================

## சுவாமி என் ஜீவ வீணை

சுவாமி என் ஜீவ வீணை - நீ
மீட்டும் நாதம் என் ஜென்ம பாக்யம்
நாவினில் இனித்திடும் கானம்
அற்புத கானம் ஐயப்ப கானம் (சுவாமி)

பிறந்தவன் மனதில் மறதி திரையிட புகுந்தது
அனித்திய பாசங்களே மாய பாசங்களே (பிறந்தவன்)

சங்கமமாகும் ஆத்மாவின் இருப்பிடம்
உன் கோவில் வாசலிலே - தேவா
சங்கமமாகும் ஆத்மாவின் இருப்பிடம்
உன் கோவில் வாசலிலே இறைவா
உன் கோவில் வாசலிலே ( சுவாமி)

அலைந்திடும் மனதினை ஒரு வழி கூட்டும்
பகவான் இசைஞான திருக்கோலமே - சுவாமி
திருக்கோலமே (அலைந்திடும்)

பஞ்ச பூதங்களை சுருதி லயத்தோடு சேர்க்கும்
மெய் ஞான ராக ரபா (பஞ்ச)

எல்லாம் நீ மீட்டும் வீணையின் நாதம் (சுவாமி)

================================================================================

## மாலையும் மார்பிலிட்டு நோன்புகள் நோற்று

ஐயனே.... ஐ.... சரணம் ஐயப்பா
ஐயனே.... ஐ.... சரணம் ஐயப்பா
மாலையும் மார்பிலிட்டு நோன்புகள் நோற்று நாங்கள்
மாமலைகள் ண்டிவருவோம் ஐயனைக் காண்போம்
கன்னிமலை பொன்மலை புண்யமலை சபரிமலை
கன்னிமலை பொன்மலை புண்யமலை சபரிமலை
மணிகண்டன் வாழும் மலை - பக்தர்
பல நாடு விட்டிங்கே பல கோடியாய் சேர்ந்து
சரணம் முழங்கும் மலை - சுவாமி சரணம் முழங்கும்மலை
என் ஐயா பொன் ஐயா என் ஐயா ஐயப்பனே
சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னி)

கௌரீசன் தன்மகனாம்
கலிகால தெய்வமவன்
பம்பா நதிக்கரையில் பிறந்தானே ஐயன் ஐயன்
வேட்டையாடும் மன்னனவன் காட்டினிலே சென்ற நேரம்
கண்டெடுத்து ஐயனை வளர்த்தானே

என் ஐயா பொன்ஐயா என் ஐயா ஐயப்பனே
சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னி)

வில்லாளி வீரனாகி வீரமணிகண்டனாகி
புலிவாகனனாகி சுவாமி மகிஷிமர்த்தனனாகி
ஏழுமலை தாண்டி ஐயன் சபரிமலை மேலமர்ந்தான்
நாம் அவனை போற்றி நலம் பெறுவோம்
என் ஐயா பொன்ஐயா என் ஐயா ஐயப்பனே
சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னிமலை)

கன்னிகட்டு நிறைவு செய்தவர்
கரிமலை நீலிமலை கடந்து வருபவர்
பதினெட்டாம் படி ஏறி வருபவர்
சரணம் முழங்கி ஆடிப்பாடி வருபவர்
மோட்சம் பெற முக்தி பெற பாட்டுப்பாடி
துள்ளி ஆடும் சாமி பக்தருக்குள் புரிவான்
என்ஐயா பொனஐயா எனஐயா ஐயப்பனே
சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னிமலை)

================================================================================

## சுவாமி சங்கீத தேன் பொழியும்

சுவாமி சங்கீத தேன் பொழியும்
ஏழிசை பாடகம் ஐயா - யான் (சுவாமி)

ஜெபமாலையாய் எந்த கைகளில்
மந்திர சுதி மீட்டும் தம்புறு கொண்டேன்
சுவாமி ஐயப்பா சுவாமி சபரிமலை சுவாமி (சுவாமி)

ப்ரம்மயாமத்தில் பூசை நேரத்தில் சன்னதியில் யாய் இருந்து
பொன்னம்பல வாசன் ஐயப்பன் - உந்தன்
புண்யாகூஷரம் மந்திரம் பாடி - தேவா
புவிமறந்திருப்பேன் யான் புவி மறந்திருப்பேன் (சுவாமி)

மனிதராய் வாழ்வதில் யாவரும் ஒன்றென
மணிகண்ட சுவாமி அருள் செய்தாய்
மதபேதங்களும் மாய்ந்திர வேண்டுமென்னும்
மதி நலம் தரும் உரையான் கேட்டேன் (சுவாமி)

சீர்மேவும் தத்துவம் என்குரல் நாதத்தில்
பாரெங்கும் பரவிட இசைப்பேன்
ஆர்வத்தினாலேயான் பாட மனத்திரையில்
தேவா உன் உருவம் நிலைக்கும்
குளமெனும் பெரும் கோவில் உனக்காகவே (சுவாமி)

================================================================================

## என்மனம் பொன்னம்பலம்

என்மனம் பொன்னம்பலம் அதில்
உனது எழில்ரூபம்
எனது நாவில் உன் திருநாமம்
புண்ய நெய்வேத்யம் (என்மனம்)

கனவிலும் என் நினைவிலும் தினம் செய்யும் கடமையிலும்
உனதுதீபம் ஒளியைக் காட்டும் கருணையே புரிவாய்

அடியேன் நாடிடும் இனிய தெய்வம் சபரிமலை வாழும்
அகிலாண்டேசுவரன் ஐயன் ஐயன் சரணம் ஐயப்பா (என்மனம்)

பகலிலும் காரிருளிலும் மனக்கோயில் மூடனே
யுகம் ஓராயிரம் ஆயினும் யான் தொழுது தீரேனே
இனி எனக்கொரு பிறவி வாய்ப்பினும் பூசை முடிப்பேனோ
எளியோர்க்கு நீ மோட்சம் தாராய் தீனரக்ஷகனே (என்மனம்)

==========================================================================

## எல்லாத் துன்பமும் தீர்த்திடுவாய் பொன் ஐயா சபரிவாசா

எல்லாத் துன்பமும் தீர்த்திடுவாய்
பொன் ஐயா சபரிவாசா (எல்லா)
பொல்லா நோய்களும் நீங்கிடவே
மலர்க்கையால் அருள்புரிவாய் - தேவா
எம்மை ஆதரிப்பாய் (எல்லா)

பாழாய் நாளைப் போக்காமல் உன்
நாமம் நாவால் உரைப்போமே
மாயாலோக வாழ்க்கையில் மதபேதப்
பேய்கள் ஓட்டிடுவோம்
போகம் தேடி அலைந்து திரிவோர் ஒரு கண
சுகமென அறியாரே (எல்லா)

கைகளும் கால்களும் தளர்ந்திடவே
மனமதும் அவதியில் துடித்திடவே
அகிலாண்டேசுவரா அபயம் நீ என்று
அறிந்திட்டோம் நாங்கள் அழைக்கின்றோம்
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (எல்லா)

==========================================================================

## கன்னிமலை சாமி சரணம் சொல்லும்சாமி

கன்னிமலை சாமி சரணம் சொல்லும்சாமி
கன்னிமலை சாமி சரணம் சொல்லும்சாமி
பள்ளிக்கட்டு தலையிலேந்தி கொடிய காடுமலையும் ஏறி
பள்ளிக்கட்டு தலையிலேந்தி கொடிய காடுமலையும் ஏறி
பதினெட்டாம்படி நடந்து போவது எப்போது
மண்டல விளக்குக்கோ மகர விளக்குக்கோ
ஐயப்பன் திந்தகதோம் சாமி திந்தகதோம்
அதிகாலை களிச்செழுந்து புலிவாகனனை போற்றி
ஒரு நூறு சரணங்கள் நீங்க அழைச்சு
குருத்தோலை பந்தலிட்டு இருமுடிகள் நிறைச்சுவச்சு
திருயாத்திரைக்காக நீங்கள் விரைந்து செல்லணும்
ஐயப்பன் திந்தகதோம் சாமி திந்தகதோம்

ஐயப்பன் திந்தகதோம் சாமி திந்தகதோம்

எரிமேலி அம்பலத்தில் கட்டை இறக்கணும் - நீங்க
நீறுபூசி பாட்டுப்பாடி பேட்டை துள்ளனும்
சிறுகுழலில் ஒன்று சேர்ந்து பஜனை பாடனும் - பின்பு
காடுமேடு தாண்டி அங்கு பம்பை சேரனும்
ஐயப்பன் திந்தகதோம் சாமி திந்தகதோம்
ஐயப்பன் திந்தகதோம் சாமி திந்தகதோம்

கணபதிக்கு தேங்காயை உடைச்சிடனும் - பின்ட
இருமுடிகள் தாங்கி நீங்க மலையேறனும்
பதினெட்டாம் படியேறி ஐயனைக் காணனும் - அங்கு
அபிஷேகம் எல்லாம் வணங்கி மகிழனும்
ஐயப்பன் திந்தகதோம் சாமி திந்தகதோம்
ஐயப்பன் திந்தகதோம் சாமி திந்தகதோம் (8 முறை)

==========================================================================================

பாடல் 18

சபரிமலைவாசா தேவா சரணம் நீ ஐயப்பா - தேவா
சபரிமலைவாசா தேவா சரணம் நீ ஐயப்பா - தேவா
உறவு எல்லாம் சுவாமி உண்மையில்லை சுவாமி
உறவு எல்லாம் இங்கே உண்மையில்லை
பிறவிப் பயன் பெற அருள் ஈசா ( சபரிமலை)

வாழ்க்கை எனும் பயணம் காரிருளில் ஐயா
வழி அறியாதலையும் நேரம் - உன்
திருதீபத்தின் பொன்னொளி காட்டியே
அருள்மழை பொழிகுவாய் ஐயப்பா - உன்னை
அடைந்திட வழி செய்வாய் மெய்யப்பா (சபரிமலை)

சொந்தபந்தங்கள் காத்திட அலையும்
வாழ்க்கையை வாழ்ந்திடல் தேவையோ
சூன்யமன்றோ கானல் நீரல்லவோ வாழ்க்கை
நித்தியமானவன் நீயன்றோ என்றும்
சத்தியமானவன் நீயன்றோ (சபரிமலை)

==========================================================================

## சபரிஜயனே நேசா சபரி ஐயனே நேசா - தேவா

சபரிஜயனே நேசா சபரி ஐயனே நேசா - தேவா
சரணாகதி அடைந்தேன் ஐயா (சபரி)

திருவடிதான் எனது துணை அருளும் நாயகா ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் பொன்ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் பொன்ஐயப்பா
சபரிகிரீசா சரணம் சரணம் சரணம் ஐயப்பா

சபரிகிரீசா சரணம் சரணம் சரணம் ஐயப்பா (சபரி)

மனசந்தனாபிஷேக தயாபரா
ஹரிஹரன் மைந்தனே ஐயப்பா
தவம் செய்ய அறியேன் தாளினை அடைந்தேன்
மனமிரங்கும் சாமிபக்தன் யான் (ஐயப்பா)

மணிகண்டா மகிஷிமர்த்தனா
புனித தெய்வமே தூயவனே
கலியுகவரதா காத்திடும் துணைவா
வரமே தருவாய் புருஷோத்தமா (சபரி)

================================================================

## கார்த்திகை பூங்காவை விரதம் காத்திடும் திருவேளை

கார்த்திகை பூங்காவை விரதம்
காத்திடும் திருவேளை
மாலையணிந்தவர் கோவிலை நாடிட ஒன்று சேரும் நேரம்
நோன்பு ஆரமப நன்னேரம் (கார்த்திகை)

சாமியே ஐயப்போ சாமியே ஐயப்போ
சாமியே ஐயப்போ சரணம் சரணம் ஐயப்போ
சாதிபேதம் ஒன்றுமில்லை சாதிபேதம் ஒன்றுமில்லை
ஏற்ற தாழ்வு ஏதுமில்லை
மாலையிட்ட மாந்தர்க்கு மனம் சுத்தமாகும் - என்றும்
மணிகண்டன் புகழைப்பாட மகிழ்ச்சிகள் கூடும் (கார்த்திகை)

பேட்டை துள்ளி பாட்டுப்பாடி
பேட்டை துள்ளி பாட்டுப்பாடி
காடுகளும் மலையுமேறி
கூட்டமுடன் பதினெட்டாம் படிகளேறி
சுவாமியைக் கண்டு தொழுது புண்ணியம் நாட
எல்லாத் தீமைகளும் மறைந்து விட புனிதம் கூட( கார்த்திகை)

====================================================================================

## பம்பா கணபதி அன்பின் அதிபதி

பம்பா கணபதி அன்பின் அதிபதி
நன்மை அருள்கின்றாய்
அய்யன் மலை வரும் மாந்தரின்
இனத்தை வாழ்த்திட நீயுள்ளாய்
சாமி சோதரானாகின்றாய்-துயரினை
நீக்கியே காக்கின்றாய்

தடை என்ன வந்தாலும் உடைகின்ற தேங்காயாய்
கடும் பக்தி விரதத்தால் அவையாகும்.
அருளெனும் சொல்லுக்கே பொருளாக ஆகின்ற
அன்னையின் ரூபமே முன்னிற்கும்-கண்டு
பூப்போல கைகளும் வணங்கி நிற்கும்
பிரேதாயுகம் கண்ட அவதார மாமன்னன்
சீதாபதி ராமன் இருக்கின்றான்
அழகிய ராமனின் அடிபோற்றும் மாருதி
பக்தர்களின் ஒருவன்போல் நிற்கின்றான்
என்றென்றும் மாறாத பக்திக்கு அருள்கின்றான்

==========================================================================

## தியாக ராஜ சங்கீதம் ஸ்ரீராமன்

தியாக ராஜ சங்கீதம் ஸ்ரீராமன்
புரந்தர சங்கீதம் ஸ்ரீகிருஷ்ணன்

சுவாதியின் சங்கீதம் பத்மநாபன்
அனைவரின் சங்கீதம் ஐயப்பன் சுவாமி ஐயப்பன்
சுவாமி சங்கீதத்தின் அமுத சங்கீதத்தின்
ஆரோகணம் சபரி மாமலை
பாடிடும் பொழுது பக்திப் பெருகி
மலை உச்சி நாடும் எனது உள்ளம்
ஸ்வர ராஜ பூஜை என்றும்
(தியாக)
செவியினில் தேன் சிந்தும் இனிய சங்கீதத்தின்
ஆரோகணம் பம்பா தீர்த்தம்
கானம் என்னும் இசை சாதகத்தின்
அலையாய் பெருகும் எனது மனம்
ஸ்ருதி சுத்த நாத வெள்ளம் (தியாக)

==========================================================================

## பாவம் கழுவிடும் பம்பா

பாவம் கழுவிடும் பம்பா
பாவம் அழித்திடும் பம்பா
பாவ நாசினி பம்பா
பூரண புண்ணிய நதி நீ பம்பா
(பாவம்)

புண்ணிய பம்பையில் மூழ்கிக் குளிக்காத
பொன் காலை மாலைகள் உண்டோ
உன் குளிர் நீரினால் பாவம் போக்காத
முன்னோர் நினைவுகள் உண்டோ
பம்பே பம்பே

பாற்கடல் கூட உனக்குப் பின்பே
பம்பா ஸ்நானம் பரமபவித்ரம் நாங்கள் செய்கின்றோம்
பரமன் மைந்தன் பந்தள சபையின் உள்ளம் கனிகின்றான்
(பாவம்)
பழமை பழக்கம்போல் ஐயன் வரும்போது
பரிமாற படையல்கள் உண்டோ
உன் இதயத்தில விளக்கொளி ஏற்றாத
கார்த்திகை தாரகை உண்டோ
பம்பே பம்பே

பாற்கடல் கூட உனக்குப்பின்பே
பம்பை படையலுக்கு ஐயன் வரணும் என்னுடன் சுவைக்கனும்
பம்பை விளக்கைக்கண்டு மகிழ்ந்திட ஐயன் அருள் தரணும்

==========================================================

## ஹரிஹவராசனம் கேட்டு உறங்கிய ஹரிஹர புத்ரா எழுவாய்

ஹரிஹவராசனம் கேட்டு உறங்கிய
ஹரிஹர புத்ரா எழுவாய்
அடியவன் கீதம் எனும் தேனாலே
அபிஷேகங்கள் புரிவேன் என்னை
உன்னிடம் அடிமையாக்கு

(ஹரிவ)
ஸ்வாமியின் பாட்டுக்களே சரண மந்திரங்களாப
ஐயன் பூசையின் தொடக்கம் மாமலை
ஐயன் பூசையின் தொடக்கம்
அமரரும் போற்றிடும் நாதனின் நாமங்கள்
மனிதரின் மனங்களில் மணக்கும்
எழுவாய் விரைவாய் எழுவாய் நாதா
உதயத்து திருக்கோலம் காணும்
இதயத்தில் அருள் கூடும்

(ஹரிவ)

==========================================================================

## வாவரு சாமிக்கு காணிக்கை போட்டு

வாவரு சாமிக்கு காணிக்கை போட்டு
என்னையே அர்ப்பித்து ஐயனின் கால்களைத் தொட்டு
அருத்திங்கள் கோயிலில் மாலை கழற்றி
அனைவரும் ஒரே சாதியென்றறிந்தேன்
மனிதர்கள் ஒரே சாதியென்றறிந்தேன்

கொச்சு தொம்மன் சாமியுண்டு கூட்டத்தாருண்டு
உற்ற தோழன் வாபருண்டு சுற்றத்தாருண்டு

எங்கும் சுற்றத்தாருண்டு
பொம்மனும் வாபரும் ஐயப்ப சாமியும் தங்களின் சாதியைக் கண்டதில்லை
தேகபலம் தரும் பாதபலம் தரும் தேவன் நம் சாமிக்கு சாதியில்லை
பாண்டி நாட்டில் வணங்கும் போல உலகமெல்லாமே-நம்ம
பஞ்சபூதநாதன் புகழ் பாடி மகிழ்வோம்
சமநிலைபெறனும் நல்ல நட்பு பெருகனும்
எம்மதமும் வாபரும ஐயப்ப சாமியும தஙகளின சாதியைக் கண்டதில்லை
தேகபலம்தரும் பாதபலம் தரும் தேவன் நம் சாமிக்கு சாதியில்லை

சாந்தி தேடும் உலகில் மனித இதயமுன்பாக-இந்த
சாதி விலகி ஐயப்ப ஜோதி தெரியணும்
தீமை அழியனும் பெரும் நன்மை பெருகணும்
பொம்மனும் வாபரும் ஐயப்ப சாமியும் தங்களின் சாதியைக் கண்டதில்லை
தேகபலம் பாதபலம் தரும் தேவன் நம் சாமிக்கு சாதியில்லை.

===============================================================================

## ஸ்ரீசபரீசம் ஸ்ரீசைவேதம்

ஸ்ரீதேவ தேவ சுதம் தே வம் ப்ரணமாம்யஹம்
ஸ்ரீதேவ தேவ சுதம் தே வம் ப்ரணமாம்யஹம்

ஸ்ரீசபரீசம் ஸ்ரீசைவேதம்
ஸ்ரீதேவ தேவ சுதம் தே வம் ப்ரணமாம்யஹம்
தே வம் பிரணமாம்யஹம்
லோகவீரம் சுரம் வரந்த மாம்யஹம்
ஸ்ரீசபரீசம் ஸ்ரீசைவேதம்
(ஸ்ரீதேவ)
கிருதாபிஷேகப்ரியம் தபும் சருதனஜனப் பாலகம் விபம்
ஹரிஹராத்மஜம் தே வம் சுரப்ரந்த பூஜிதம்
சைலாஜி நாசம் கலி கண்மச நாசனம்
இஷ்ட பரதாயகம் தஷ்டகித்த மேககம்

==========================================================

## ஹரிஹரன் செல்வனாம் ஐயப்பசாமியை

ஹரிஹரன் செல்வனாம் ஐயப்பசாமியை
மனமென்னும் கோவிலில் வைத்தேன்
வரமருரும் தெய்வத்தின் சபரிமலை வந்து
ஐயப்ப தரிசனம் கண்டேன்
சன்னத்தியில் கற்பூர ஜோதி தைமாத
விண்ணிலே தெய்வீத ஜோதி

காத்திடும் தெய்வமாம் ஐயப்பசாமி
ஜோதியின் தரிசனம் ஜன்ம புண்யம்
லோகவீரம் மஹாபூஜ்யம் சர்வ ரக்ஷாஹரம் விபும்

பார்வதி ஹ்ருதயானந்தம் சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்

மலைவந்து கூடிடும் பல லட்சம் பக்தர் மொழிகின்ற
மொழிகளனைத்தும் வெவ்வேறு வார்த்தையில்
ஐயப்ப சாமியை துதி செய்யும் பாடலேயாகும்
பாடலின் பின்னணி கோல மணியோசையாய்
இசை நாதம் உயிரில் கலக்கும்
இதயமெங்கும் சிலித்திட நின்றேன்
பாடும் வரம் தரும் ஐயப்பசாமி காணவே
பூலோகம் கொண்ட புண்யம்
பாண்டேச வம்ச திலகம் கேரள கேலி விக்ரகம்
ஆத்தத்ரான பரம்தேவம் சாஸ்தாரம் ப்ரணமாம்பகம்

இந்த மண்ணில் என்றும் அன்பை விதைத்திடும்
சிறு மந்திரம் தேன் மணக்கும் அழகுக்குப்
பொருள் தந்த ஐயனின் ரூபத்தில் மாறாத கருணை மணக்கும்

பக்திக்கு பலன் தரும் சன்னதி எங்குமே பூவுடன்
நெய்யும் மணக்கும் - வாசமாகிடும் உள்ளமே என்றும்
பாவங்கள் போக்கிடும்-ஐயப்பசாமி
பாதத்தில் மலராகும் எங்கள் நெஞ்சம்
(ஹரிஹர)

==============================================================================

## சாமி அருள் எந்நாளும் நெஞ்சில் நிலைக்க

சாமி அருள் எந்நாளும் நெஞ்சில் நிலைக்க
ஆதார சொந்தமே குருசாமி
வான்மழை பூமிக்கு ஆதாரமது போல
நான் கண்ட பாக்கியம் குருசாமியே
ஐயன் ஐயன் ஐயன் ஐயப்ப சாமி

(சாமி)

பக்தியே இதயத்தில் மலர்ந்து ஞானமெனும் கனி
பெறக் குருவன்றோ வேராகும்-இருமுடிதான்
கொண்டே நல்வழிதான் சேர படிகள் காட்டிடும்
அருள்தீபம் என்குருசாமியே என் யோகம்
(சாமி)

மாலையைப் போட்டதும் குருவாகும் நேர்மையை
நானுமே உணர்த்திடச் செய்தாரே-மலையிலே
எழில் பொன்முகமே நான் காண-குரு
வழி செல்கின்றேன் தினம்தோறும்
ஐயன் ஐயன் ஐயப்பன் துணை வேண்டும் (சாமி)

==============================================================================

## சரங்குத்தி ஆல்பார்த்து உடைபட்ட மனதோடு

சரங்குத்தி ஆல்பார்த்து உடைபட்ட மனதோடு
சபரிமலையில் தவிக்கிறாளம்மா
மஞ்சள்பூசி மஞ்சளோடு மஞ்சளாகி
மஞ்சமாதா என்ற பெயரை பெற்றாளம்மா
அம்மா மாளிகைப் புரத்தம்மா (சரங்குத்தி)

காலமஹாரிஷி தன் மகளாக
லீலா வென்ற உன் பெயருடன் அவதரித்தாய்
மத வெறியால் சிருங்கார சிலையாட
தக்க சாபம் பெற்று நீ மகிஷியானாய்
(சரங்குத்தி)
மகிஷியே வெளிதீத்து வதம் செய்ததால்
மணிகண்ட பெருமானை துதித்து நின்றாய்
பகவானை தரிசித்து அருள் பெற்றதால்
மகிஷி தன் நிலை மாறி மஞ்சமாதாவானாய் (சரங்குத்தி)

====================================================================

## ஐயப்ப திந்தக தோம் தோம் சாமி திந்தகதோம்

ஐயப்ப திந்தக தோம் தோம் சாமி திந்தகதோம்
ஐயப்ப திந்தக தோம் தோம் சாமி திந்தகதோம்
திந்தக திந்தக திந்தக தோம் தோம்

மகிஷியைக் கொன்றவனே ஐயப்பனே
மனசார நினைத்து ஆராதித்தேன்
கன்னிசாமி கூட்டமும் குருசாமி கூட்டமும்
பம்பை கொட்டி கைகள் தட்டி பேட்டை துள்ளி (ஐயப்பதிந்தக)

வாபரின் பள்ளிதனில் காணிக்கை போட்டு
வாபரைத் தம்முடைய துணையாய் வாழ்த்தி
அம்பலப் புழை கிருஷ்ணனை சாட் வைத்து கூட்டம்
தெப்பந்திருப் பார்ப்தோரு தொடங்கினோம் துள்ளல் (ஐயப்ப)

சாமியே ஐயப்போ ஐயப்போ சாமியே
சாமி பாதம் ஐயப்ப பாதம் ஐயப்ப பாதம் சாமிபாதம்
கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை
பகவானே பகவதியே
கற்பூரதீபம் சாமிக்கே -நெய்யபிஷேகம் சாமிக்கே

அப்பனாம் சிவபெருமான் கண்கள் திறக்க
உச்சிவேளை நட்சத்திரம் பூத்து விளங்க
ஐயப்ப சாமியின் அபிஷேகம் பார்க்க
ஆடிவரும் கூட்டம் மலையேறிச் சென்றோம்

ஐயப்பதிந்தக தோம் சாமி திந்தகதோம்
சாமி திந்தகதோம் ஐயப்ப திந்தகதோம் (மகிஷி)

===================================================================

## கார்த்திகை அதிகாலை நீராடி

கார்த்திகை அதிகாலை நீராடி கடவுள் உன்திரு நாமம் பேர்பாடி
கண்களை மூடி உன் போவிலே இன்னிசை பாடுமென் நாவினிலே
ஹரிகர மைந்தா உன் சுப்ரபாதம் பாடும்
வரமொன்று தருவாயோ ஐயப்பனே (கார்)

ஹரிகர மைந்தா உன் சுப்ரபாதம் பாடும்
வரமொன்று தருவாயோ ஐயப்பனே (கார்)

காலைக் கதிரோனம் கரங்களை நீட்டிய
வேளையிலுன் தெய்வ சன்னதியில்
ஒருராக மாலையை திருவடி மீதினில்
படைத்திடும் வரம் வேண்டும் ஐயப்பனே (கார்)

இருமுடி தனை ஏந்தி நடந்திடும் பாதையில்
சிறுகல் போல் நானும் பிறப்பேனோ
வரும் அடியார் உனை வணங்கிடும் வேளையில்
எரிந்திடும் கற்பூரம் ஆவேனோ (கார்)

===================================================================

## மஹாப்பிரபு எங்கள் மஹாப்பிரபு

மஹாப்பிரபு எங்கள் மஹாப்பிரபு
மலை மேலே வாழும் மஹாப்பிரபு
இன்னிசையில் பாடி இணைந்தது என்மனம்
என்குரல் உன்கரம் கொடுத்த வரம் (மஹா)

சப்தசுவரங்கள் செய்யும் லீலை உன் கண்ணசைவில்
சாபவிமோசனம் கண்டதய்யா
வரராஜ மலர்கொண்டு நான் செய்யும் என்பூஜை
உன்பாதம் சேரும் பாக்கியம் தான் காணும் (மஹா)

உந்தன்நினைவு என்வாழ்வில் ஸ்ருதிமீட்டும்
என்மொழி உன்புகழ் கருதி பாடும்
மனதொரு மனதாக உன் எண்ணம் லயமாக
வாழ்ந்திடும் யோகம் அது ஒன்று தான் போதும் (மஹா)

===================================================================

## வானாகி மண்ணாகி நீராகி காற்றாகி

வானாகி மண்ணாகி நீராகி காற்றாகி
நெருப்பாகி வாழ்ந்தருள் தத்துவமே
ஹரிகர சங்கம மந்திரமே

எந்தன் உடல் பொருள் ஆவி உன் சமர்ப்பணமே (வானாகி)

நாதஒலிகளில் அம்சத்துவம் நீ என
நர்த்தனமாடும் விநாயகனே
வேத ஒலிகளில் விண்ணுக்கும் மேலாக
விந்தை புரிந்திடும் நாயகனே (வானாகி)

சண்முகப் பிரியராக தீர்த்தத்தில் நீராடி
தோளில் உன் காவடி தூக்கியாடி
வேலனுக்கு அரோகரா முருகனுக்கு அரோகரா
வேல்வேல் வெற்றிவேல் வேல் வேல் வெற்றிவேல்

பழனியில் வாழ்கின்ற வேலவனே
சொந்த பந்தத்தைத் தேடாத நாயகனே (வானாகி)

---

## கானக வாசா கானவிலாசா

கானக வாசா கானவிலாசா
கண்களில் வரும் மலர் பொழிந்தேன் - என்
கண்களில் வரும் மலர் - பொழிந்தேன்
உன்கேசாதி பாதம் பணிந்தேன் (கானக)

இருவிழி செய்தது என்னென்ன புண்ணியம்
நறுமலர் மேனியில் நான்கண்ட புண்ணியம்
சிறுமனம் தினம் தினம் உன்பேரை எண்ணிடும்
வரும் துயர் போக்கிட வருவது உன்னிடம்
திருவடி துணையென தேடிய என்னிடம் (கானக)

வருவதும் போவதும் உன் சன்னிதானம்
பசியினைப் போக்கிடும் உன் அன்னதானம்
வறுமையை நீக்கிடும் அருளின் நிதானம்
அருள்மழை பொழிந்திடும் ஐயன் விதானம்
அனுதினம் அணைப்பது ஐயப்பகானம் (கானக)

---

## சபரி என்றொரு சிகரம் எங்கிலும்

சபரி என்றொரு சிகரம் எங்கிலும்
சரணம் ஒலித்தேன் சரணம் சரணம்
அபயம் என்றதும் அபயம் தந்திடும்
ஐயப்பன் ஒலியா சரணம் சரணம்
சபலம் சலனம் எல்லாம் கடந்த தத்துவபொருளாகும்
அதை உணரும் நேரம் சரணம் சரணம் சரணம் சரணம் (சபரி)

வருவோர்க்கருளும் நலமும் பலமும் நாளும் குறையாது
வருகிறஞானம் தியானம் யாவும் என்றும் மறையாது

தெளிவது இதயம் ஒளிவிடும் உதயம் குறைவே கிடையாது
அதை உணரும் நேரம் சரணம் சரணம் சரணம் சரணம் (சபரி)

கற்பூரம் ஒளி ஏற்றி இருந்து காணும் போதினிலும்
காற்றோடும் நதியாற்றோடும் நீராடும் வேளையிலும்
நேற்றும் இன்றும் நாளை வருகிற காலை மாலையிலும்
நான்பாடும் ராகம் சரணம் சரணம் சரணம் சரணம் (சபரி)

---

## எங்கெங்கும் ஐயப்பகோஷம் கேட்கின்ற மாமலையில்

எங்கெங்கும் ஐயப்பகோஷம் கேட்கின்ற மாமலையில்
ஜில்லென்ற தென்றலும் வீசும் உன்திரு சன்னதியில்
எப்போதும் உன்முகம் பார்க்கின்ற ஆசை ஐயப்பா
என்னாளும் வந்து அணைப்பது உந்தன் கையப்பா (எங்)

எப்போதும் உன்னைநினைக்க உள்ளது உள்ளமப்யா
என்னென்று சொல்வது உந்தன் பேரின்ப வெள்ளமய்யா
என்தேகம் என்கின்ற கோவிலில் இருப்பது உன்ரூபம்
என்நாவில் எப்போதும் உன்கீதமய்யா (எங்)

ஏழேழு ஜென்மமெடுக்க நான்செய்த பாவமென்ன
வெவ்வேறு வேஷங்கள் போட்டு நீ செய்யும் கோலமென்ன
இனிமேலும் இன்னொரு ஜென்மம் வேண்டாம் ஐயனே
படைத்தால் உந்தன் கோவில் மணியாய் படைப்பாய் தேவனே (எங்)

---

## உதித்தங்கே ஒளிவிளக்காக உத்திரநட்சத்திரம்

உதித்தங்கே ஒளிவிளக்காக உத்திரநட்சத்திரம் சாமியே சரணம்
தெறித்த ஒளியில் திரு விளக்காக தெய்வம் உன் அம்சம் ஐயப்ப சரணம்
குவித்தகரங்கள் கேட்கிற வரங்கள் கொடுக்கும் அருளம்சம் (உதித்த)

கலியுகவரதன் காலடிசேர்ந்தால் காணும் பேரின்பம்
தெளிவுறும் மனது தேறிடும் பொழுது தேய்ந்திடும் துன்பம்
மலரடி தொழுதேன் மனம் விட்டு அழுதேன்
மணிகண்டன் சன்னதியில் (உதித்த)

இருமுடி ஏந்தி திருவடி தேடி வரவேனோ ஐயா
கரிமலை மேலே வரும் வழிபார்த்து காத்திடுமென் ஐயா
தேக பலம்தா பாதபலம்தா
தேடிவரும் நேரம் (உதித்த)

---

## ஆனை அலையுற நீலிமலை

ஆனை அலையுற நீலிமலை நம்ம ஐப்பனோட சாமிமலை
ஏறிவருகிற ஐயப்பமார்களை ஏத்திவிடுற சபரிமலை
ஐயப்பனைத் தொழுவோம் கோயிலுக்கு வருவோம்
சாமியப்பா சரணமப்பா பம்பாவாசனே சரணமப்பா
சாமியப்பா சரணமப்பா பம்பாவாசனே சரணமப்பா (ஆனை)

வீட்டுல நாட்டுல காட்டுல மேட்டுல பாட்டுல வாழும் பகவானே

சாமியே சரணம் ஐயப்ப சரணம்
நல்லதவத்தில உள்ளமனத்தில் போற்றிவணங்கவருவோனே
சாமியே சரணம் ஐயப்ப சரணம்
கேட்டவரங்களை நாட்டு நலங்களை காத்து இருந்து தருவோனே

சாமிதிந்தகத்தோம் திந்தகத்தோம்
ஐயப்பன் திந்தகத்தோம் திந்தகத்தோம் (ஆனை)

உன்திரு நாமத்தை சொல்லியபேருக்கு துன்பங்கள்
என்னைக்கும் தொடராது
சாமியே சரணம் ஐயப்பசரணம்
பண்ணின பாவங்கள் பந்தளவாசனின்
பார்வையில்படப்படராது

சாமியே சரணம் ஐயப்பசரணம்
எண்ணின நன்மைங்க எப்போதும் துலங்கும் என்னைக்குமே அதுமாறாது

சாமி திந்தகத்தோம் திந்தகத்தோம்
ஐயப்பன் திந்தகத்தோம் திந்தகத்தோம் (ஆனை)

=========================================================================

## காட்டுல சாமிக்கு வீடு யானையும் புலிகளும் இருக்குது பாரு

ஓஒ..ஹரிஓம் ஹரிகரசுதனே ஹரிஓம் ஹரிகரசுதனே
சரணம் சரணம் சரணம் சரணம் சரணம் சரணம் சரணம் சரணம்
காட்டுல சாமிக்கு வீடு யானையும் புலிகளும் இருக்குது பாரு
காட்டுல சாமியை பாடு யானையும் புலிகளும் வழிவிடும் பாரு
நாளும் விரதம் நீயுமிருந்து பாரு போய்ப்பாரு
பசியிலகேட்டது எல்லாம் தருவாரு இப்படிச் செய்வாரு
மனசுல எண்ணின மாதிரி வருவாரு (காட்டுல)

சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே
ஹரிகரசுதனே சரணம் பொன்னய்யப்பா ஹரிகரசுதனே
ஹரிஓம் ஹரிகரசுதனே
பம்பையில் நிராடு பக்தியில் ஐயப்பன் பேரையும் பாடு
சாமியே ஐயப்போ ஐயப்போ சாமியே
ஐயப்பா சாமியே சாமியே ஐயப்பா
கரிமலை ஏற்றம் கடினம் பாரு

காலுவலிச்சா சத்தம் போட்டு சாமியை நீபாடு - சாமியே (காட்டு)

சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே
ஹரிகரசுதன சரணம் பொன்னய்யப்பா ஹரிகரசுதனே
ஹரிஓம் ஹரிகரசுதனே
சபரிபீடம் அதைப்பாரு தெரியும் பாரு சரங்குத்திஆலு
போடு வேட்டுவழிபாடு போட்டசாமி வரம் தருவாரு
படிபதினெட்டும் ஏறியும் பாரு
தெரியும் அங்கு சன்னதி பாரு சாமியை நீ பாரு - சாமியே (காட்டுல)

ஹரிஓம் ஹரிகரசுதனே ஹரிஓம் ஹரிகரசுதனே
சரணம் சரணம் சரணம்
தேவலோகம் அதைப்போல சாமியின் வீடுஜொலிக்குதுபாரு
தேவை என்ன கேட்டிட வேணும்
லாபம் வேண்டி கேட்டிட வேணாம் - நியாயம்தருவாரு (காட்டுல)

சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே
சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே

---

## வானுக்கொரு மகரவிளக்கு பூமிக்கொரு பம்பைவிளக்கு

சாமியே சரணமய்யப்பா சாமியே சரணமய்யப்பா
சரணம் சரணம் சரணம் சரணம்
சரணம் சரணம் சரணம் சரணம்
சரணம் சரணம் சரணம் சரணம்
சரணம் சரணம் சரணம் சரணம்
வானுக்கொரு மகரவிளக்கு மகரவிளக்கு மகரவிளக்கு
பூமிக்கொரு பம்பைவிளக்கு பம்பைவிளக்கு பம்பைவிளக்கு
வானுக்கொரு மகரவிளக்கு
பூமிக்கொரு பம்பைவிளக்கு (வானு)

சாமியே சரணம் சரணம் சரணம்
சாமியே சரணம் சரணம் சரணம்
சாமியே சரணம் சரணம் சரணம்
சாமியே சரணம் சரணம் சரணம்
ஒளிவீசும் ஜோதிவிளக்கு உறங்காத நீதிவிளக்கு
வழிபாதை கூறும் விளக்கு வானெங்கும் ஏறும் விளக்கு
ஐயப்பன் அன்பு விளக்கு
சாமியே சரணம் சரணம் சரணம்.... (வானு)

திந்தகத்தோம் சாமியே திந்தகத்தோம் ஐயப்பா..
பலநாளாய் விரதமிருந்து ஒளியேற்றும் ஞானவிளக்கு
பலராகத் திரிகளிலாடும் பாடலெனும் கானவிளக்கு
ஐயப்பன் அன்பு விளக்கு
சாமியே சரணம் சரணம் சரணம்... (வானு)

---

## உன் ஆராதனை பொன்னலங்காரக் கோலம்

உன் ஆராதனை பொன்னலங்காரக் கோலம்
ஆனந்தம் ஆனந்தம் நான் கண்ட நேரம்
கண்பாரத போது என் பசிதாகம் மீறும்
பார்த்தாலும் இன்றெந்தன் பாவங்கள் தீரும் (உன்)

அபிஷேக நேரம் உன் அழகானரூபம் - அதைக்
கண்ட அடியார்க்கு வேறென்ன வேண்டும்
நெய் வந்து உந்தன் மெய்சேரும்போது
சரணம் உன்சரணம் சரணம் சரணம் எனப்பாட வேண்டும் (உன்)

பம்பாவின் நீரில் நான் நின்றாடும்போது
பதமான இதமான சுகமான இன்பம்
தலைமீது உந்தன் இருமுடியைத்தாங்கி
நடந்தேன் நடந்தேன் திருவாசல்தேடி (உன்)

---

## காற்றினிலே வரும் கீதம் உந்தன் ஹரிவராசனம்

காற்றினிலே வரும் கீதம் உந்தன் ஹரிவராசனம்
கார்த்திகை மார்கழி காலம்தோறும் புண்ணிய தரிசனம்
நேற்றிலும் இன்றிலும் நாளையும் நாங்கள் கண்டிடும் தரிசம்
வார்த்தையில் சொல்ல வார்த்தை வராத உன் முகதரிசனம்
வானவர்தேடி வந்து வணங்கும் தேவனின் தரிசனம்
வானம்பூமி யாவும் மகிழ்ந்து காணும் தரிசனம்
வாடிய உள்ளம் வசந்தம் காணும் ஐயனின் தரிசனம் (காற்)

பாவங்கள் என்று தெரிந்திருந்தாலும் விலகிட முடியாமல்
பாசங்கள் பந்தங்கள் நேசங்கள் யாவும் மறுத்திட இயலாமல்
கோபங்கள் தாபங்கள் மீறிட நாங்கள் குறைத்தி_ முடியாமல்
குணங்களில் இருள்வரப் பகலிலும் எங்கள் பொழுதும் விடியாமல்
இத்தனைபாவம் யாவையும் போக்கும் சாமியே சரணம்
சத்தியமாக சத்தியம் காக்கும் சாமியே சரணம்
பூமியில் எங்களின் புகலிடம் ஒன்று உன்திருவடி சரணம் (காற்)

நீலிமலையிலும் நிழலென வந்து ஏற்றிவிடென் ஐயா
நேரில்காணும் ஏற்றத்தில் எங்களைத் தூக்கி விடென் ஐயா
பாதம் தளர்ந்திட பசியது கூடிட பார்த்திடும் என்ஐயா
பாடும் பாவிலும் படித்திடும் நாவிலும் இருந்திடு என் ஐயா
வாடிமெலிந்து வருகிற எங்களைக் காத்திடும் என்ஐயா
நாடி ஒடுங்கி நடந்திடும் நாங்கள் நம்பிய என்ஐபா (காற்)

மலையினில் ஏறிடும் மணிகண்டசாமிக்கு துணையது நீ ஐயா
தேகம் தளர்ந்தாலும் திந்தகத்தோம் எனப்பாடுகிறோம் ஐயா
இருமுடி ஏந்தும் தலைமுதல் கால்வரை இருந்திடு என் ஐயா
வழித்துணை நீயென வந்திடும் சுவாமிகள் வணங்கிடும் என் ஐயா

பாதபலம்தா தேகபலம்தா பம்பாவாசனே

பாவங்களோடிட பார்த்திடும் நாங்கள் நம்பிய தேவனே (காற்)

## என்னென்று கூறட்டும் என்னப்பனே

என்னென்று கூறட்டும் என்னப்பனே
விழிபார்த்திடும் நாவிலும் உந்தன் முகம்
உன்பக்தனென்தன் மனமெங்கும் கண்ணன் மகன்
உன்மந்திரம் ஐயன் ஐயனய்யப்பா (என்)

உள்ளத்தில் கல்லுமுள்ளுகுத்தும் தைக்கும் நந்தவனமிவ்வுலக
வாழ்க்கைப் பாதை அறியானால் வந்ததிந்த பாதையன்றோ
என்துயரம் மாறுதே உள்ளம் அன்பில் ஊறுதே
ஐயன் ஐயப்பா சாமி சரணம் ஐயப்பா (என்)

ஐயன் அன்று இருமுடி சுமந்து போன இங்கு வந்து
காட்டில் வாழும் காட்டாளர் வண்ண எழில் காணுகையில்
சிவனையே கண்ணில் காணும் தன்மையென எண்ணுகின்றேன்
சரணமய்யப்பா சாமி சரணம் ஐயப்பா (என்)

கண்ணன் பிள்ளை மாமலையை உள்மயங்க நின்று பார்த்து
மலையது முழுநிலவோளியில் மாதவனின் பாற்கடலாய்
கண்டு கொண்டேன் மாயோனை பாவமெல்லாம் இன்றுமாற
சரணம் ஐயப்பா சாமி சரணம் ஐயப்பா (என்)

உள்ளமென்ற சன்னிதானம் ஒடும்பம்பை கானமந்திரம்
இசையில் செய்யும் அபிஷேகம் நாளும் நாத சந்தோஷம்
உலகம் சொல்லும் தெய்வநாமம் உன்திருவடி சரண மொன்றே
சரணம் ஐயப்பா சாமி சரணம் ஐயப்பா (என்)

---

## வானக புஷ்பம் மண்ணோடு வாசம்

வானக புஷ்பம் மண்ணோடு வாசம் பம்பையின் ஓரம்
தேவர் வழிபடும் ஐயனின் பாட்டில் பக்திதரும்ஸ்வரம்
சூரவதம் மண்ணில் வந்த சண்முக அவதார நோக்கம்
மகிஷி பாவத்தின் நிலையை மாற்றும் ஹரிகரடத்ரன் (கானக)

தெய்வீக பாலன் நாமம் எங்கள் இன்பமும் ஆகும்
மாறாமனத்தால் என்றன் ஞானமே இல்லாது போகும்
ஹரிகர பாலகன் வானகஜோதியின் அற்புதவண்ணம்
மாயத்து மேகத்தை சிவ மூகில்தொட்டிட ஒழிந்திடும் இன்னல் (வானக)

ஞானவிநாயகன் தம்பியமர்ந்துள்ள சன்னிதிகாண
காத்திடும் நாயகன் மாலையணிந்திடும் அன்பரின் கூட்டங்களே
கார்த்திகை மாதமே மலைவரவேண்டி விரதத்தையும் கொண்டோம்
அத்வைத மந்திரமாம் உனபேரைக் கூறி விள கொளி கண்டோம் (கான)

WWW.TAMILGOD.ORG

## சிவனோடு மாயன் சேர்ந்தருள்

சிவனோடு மாயன் சேர்ந்தருள் செய்திடும்
சபரி சன்னதி வந்தேன்
அருள் வானத்து ஜோதியாய் பூலோக வாழ்க்கையை
காப்பவன் தரிசனம் கண்டேன் -ஐயப்பா
என்னாள்பவன் தரிசம் கண்டேன் (சிவனோடு)

பூமியில் உயர்சத்ய வேதங்களும்
மாறா அருள் ஞானிகளும்
உலகமும் ஜீவ ஞானிகளும்
நாதா உன் பிரதிபிம்பம் - ஐயப்பா
என் நாதா உன் பிரதி பிம்பம் (சிவனோடு)

சன்னிதி கற்பூர நெய்தீபங்களில்-உனைப்
பொன்னாய் பூவாய்ப் பார்க்கையில்
பரமாத்மாவின் பேரின்பத்தில்
நிம்மதி ஐஸ்வர்யம் கொண்டேன்-ஐயப்பா
நிம்மதி ஐஸ்வர்யம் கொண்டேன் (சிவனோடு)

============================================================

## காசிநாதனை வணங்கினேனில்லை

காசிநாதனை வணங்கினேனில்லை
கைலாசம் தான் போகினேன் நானில்லை
விஷ்ணு மகேஷ்வர புத்ர தரிசனத்தால்
விஷ்ணு மகேஷ்வரன் பாதம் அடைந்தேன் (காசி)

குளத்துப்புழையில் குமாரரூபத்தோடும்
ஆரியங்காவில் நவயோவனத்தோடும்
அச்சங்கோவிலில் இல்லறத்தானாகவும்
ஆரண்ய கேத்ரங்களில் உன்னைக் கண்டேன்
என்றாலும் நித்திய பிரம்மச் சாரியாய்
உன்னைக் காண சபரிமலை வந்தேன்
உன்னைக் காண சபரிமலை வந்தேன் (காசி)

வனாந்தரங்களில் பஞ்சபூதத்தையும்
பம்பாதீரத்தில் மூலகணபதியையும்
பொன்னம்பல மேட்டில் அதிர்ஷ்ய சாஸ்தாவையும்
வாழ்த்தி வணங்கி கைகூப்பி நின்றேன்
என்றாலும் கருணைக்கடலாம் உன்னைக்
காணவே சன்னிதி நான் வந்தேன்
காணவே சன்னிதி நான் வந்தேன் (காசி)

============================================================

## சபரிமலையில் தாழ்ந்தே வழிந்திடும் புண்ணிய நதியாம்

சபரிமலையில் தாழ்ந்தே வழிந்திடும் புண்ணிய நதியாம் பம்பா
சபரிமலையினில் மேலாய் வழிந்திடும் சரணமந்திரமாம் பம்பா
பம்பா நதிகள் வளம் செய்யும் சன்னிதி எத்தனை தூய்மை
ஐயப்பா எத்தனை தூய்மை எத்தனை தூய்மை (சபரி)

எரிமேனிப்பேட்டைதுள்ளி வரும் கன்னிமலையாரும்
பதினெட்டாம் முறை மலைக்கு வருகின்ற குருசாமியோரும்
பக்தியாம் நெய்யபிஷேகம் செய்யும்-உன்
அழகுடை ரூபம் ஐயப்பா எத்தனை தூய்மை (சபரி)

ஜீவன் முக்தராய் ஆகுகின்ற பரமசித்தர்கள் தாமும்
இருமுடி கட்டும் ஏந்தி சரணம் பாடுகின்ற பக்தர்களும்
ஒன்றுபோல் உந்தன் திருவடி அடையும்
இவ்வழகிய தரிசனம் ஐயப்பா எத்தனை தூய்மை (சபரி)

காட்டில் வந்து நான் துணைக்கழைத்தேன்
துணையருள் நீ வந்தே
ஜீவியமாம் கொடும் காடு கடக்கேன்
துணையருள் நீ வந்தே - ஐயப்பா
துணையருள் நீ வந்தே (காட்டில்)

பாரினில் கள்ளும் முல்லும் கொண்டென்
பாதங்களெவ்வளவோ நைந்து முறிந்தே
கோரத்ய குன்றும் மலையும் கடந்து
மனமும் எவ்வளவோ தளர்ந்தும் வீழ்ந்தேன்
ஏகனாய் அலைந்தேன் நான்புவியில்
ஏகாம் பரனே உனைக் கண்டிடவே (காட்டில்)

பந்தமாம் பாசமாம் கட்டுகளில்
பாவி எவ்வளவாய் அமிழ்ந்து விட்டேன்
காமக்கோர காடி தாம் புவி தன்
பிடியில் எவ்வளவாய் நான்தினைக்கப்பட்டேன்
ஏகநாய் அலைந்தேன் நான்புவியில்
ஏகாம்பரனே உனைக் கண்டிடவே (காட்டில்)

---

## சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா

உலகத்தத்துவமந்திரமே உணர்த்தும் நாதாவாழ்வுக்கு
வளமாய் வழியும் காட்டிய உன் அர்ச்சனையே தினம் (உலக)

சரணமய்யப்பா சுவாமி சரணமய்யப்பா
சைவவைஷ்ணவனே சுவாமி சரணமய்யப்பா
வேட்டையாடும் நாதனெங்கள் மனதில் எங்குமுள்ள
மோகம் கோபம் மிருகம் யாவும் விரைந்தோட்டுங்கள்
மண்டல விரதம் காத்து உந்தன் சன்னிதானம்
குருசாமியோரும் இன்று வந்து நின்றோம் (சரணமாய்)

பம்பா நதிக்கு வந்து மணிகண்டன் மந்திரங்கள்
சொல்லி பம்பையில் ஞானத்தை உணர்ந்தோமே
என்றும் உந்தன் சங்கீதம் பம்பைபோல நெஞ்சில் பொங்க
பம்பையில் விளக்குவைத்து இருள் அகன்றோம் (சரணமய்)

ஞானபலம் சேர்க்கும் நாதா பாதபலம் தந்தாய்
மலைவந்து தியானித்து உன்னில் கலந்தோம்
பிரிவில்லை மதஜாதி அருள்கூடும் ஒற்றுமைக்கே
ஹரிமகேஷ்வரனின் புத்ரதர்மமே ஆகும் (சரணமய்)

===================================================================

## வாழ்க வாழ்க தேவலோகம்

வாழ்க வாழ்க தேவலோகம் வாழ்க
வாழ்க வாழ்க திருமைக்கோலம் வாழ்க
வாழ்க வாழ்க பஞ்சத்ரியம் வாழ்க
வாழ்க வாழ்க அஷ்டகானம் வாழ்க (வாழ்க)

மூன்று முணம் வாழ்க சன்னிதானம் வாழ்க
வித்தையும் வாழ்க வித்தையும் வாழ்க
பஞ்ச பூதங்களின் பூதப் பெருமாளாய்
வேட்டைக்கு ஒரு மகன் ஐயப்பன் வாழ்க (வாழ்க)

ஒண்ணாம் திருப்படி பொன்னளக்கும் நேரம் பாலகணபதி வாழ்க
இரண்டாம் திருப்படி இசைகேட்கும் நேரம் வாணி சரஸ்வதி வாழ்க
மூணாம் பொன்படி பூப்பந்தலிட்ட முக்கோடிதேவரும் வாழ்க
நாலாம் பொன்படி நாதம் முழக்கும் நான்கு வேதம் வாழ்க
அஞ்சாம் திருப்படி ஏறித்துடி கொட்டும் பஞ்ச பூதங்களும் வாழ்க

ஆறாம் பொன்படி அர்ச்சனை செய்யும்
ஆறுசாஸ்திரங்களும் வாழ்க
ஏழாம் சேவடி ஏழிசை மீட்டும் ஏழுஸ்வரங்களும் வாழ்க
எட்டாம் திருப்படி தொட்டு தொழுகிறோம் எட்டு திசையும் படி ஜொலிக்க
ஒன்பதாம் திருப்படி நோன்பு முடிக்கையில் ஒன்பது கோள்களும் வாழ்க
பத்தாம் திருப்படி கண்திறக்கும்போது பத்தவராம் கொடுக்க

பதினொன்னாம் திருப்படி பாதம்பதித்து ஆதித்த தேவனைக் காணும்
பன்னெண்டாம் திருப்படி பார்த்து தொழும்நேரம் பன்னென்று தேசமும் வாழ்க
பதிமூணாம் பூப்படி கால் வைக்கும்போது அத்தனை உயிர்களும் வாழ்க
பத்தும் நாலும் படி ஏறிச்செல்கையில் பதினாலு லோகமும் வாழ்க
பத்துமோர் அஞ்சுமாம் பொன்படி ஏறிட மாளிகைப்புறமும் வாழ்க

பத்துமோர் ஆறும்படி மேல் பூஜிக்க வாபருசாமியும் வாழ்க
பதினேழாம் பொன்படி தானாகவே காண்கையில் கொச்சு கடுத்தையும் வாழ்க
பதினெட்டாம் திருப்படி பொன்னளக்கும் நேரம் கேசாதி பாதமும் வாழ்க
பாதாதி கேசமும் வாழ்க (வாழ்க)

## கைலாசத் திருமலையில் திருவேடன் ரூபம்

கைலாசத் திருமலையில் திருவேடன் ரூபம் கொண்டு
திருவேடப் பெண்ணோடு வந்து பூதப்படை
முரசமுழக்க திருவேட்டையாட திருவேட்டையாட
திருவேட்டையாட (கைலாச)

மதயானை கொம்பொடித்து களிமண்ணில்
தினைவித்து எடுத்து விதைத்து வேடப் பெண்ணாள்
வெள்ளி வெயில் சாந்தணிந்து செந்தினை பூத்த
அம்பினால் காவல் காத்த பூத்திருவேடன் (கைலாச)

மறுமலையில் போரழைப்பு காற்றில் ஒலிக்க
செஞ்சடை மேல் அம்புதைக்க வேடன் கோபிக்க
அம்பெல்லாம் மலரம்பாக்கினாள் வேடப் பெண்ணாள்.
கைலாசம் பூமலையாக திருவாதிரை இரவாக (கைலாச)

கல்லும் முள்ளும் நிறைந்த வனத்தில் நான்
ஆதித்ய பாதங்கள் தேடி ஆளும் சம்சார
ஆழியின் அக்கரை சத்யமாம் ஜோதியைத் தேடி (கல்லும்)

கரிமலையும் அழுதையும் மகாநதி பம்பையும்
இளமலரும் வண்டுகளும் ஏகாந்த மேகமும்
அகம் இருள் அகற்றிடும் கனகமணி தீபமாம்
வில்லாளி வீரனின் நாமமும் சொல்லவே. (கல்லும்)

மலையேறும் காலடிகள் அலையும் நடை வழிகள்
பதினெட்டு திருப்படிகளாக வேண்டும்
நாவினில் வருகின்ற தீயசொல் வார்த்தைகள்
அமர வேதாந்தங்களாக வேண்டும்.
பஞ்ச பூதத்தால் உருவான என் தேகம்
பாவன கோவிலாய் மாற வேண்டும் (கல்லும்)

ஜென்ம ஜென்மாந்திர புண்ணிய பாவங்கள்
இருமுடிக் கட்டாக ஏற்ற வேண்டும்
மோகாந்த நித்திரைகள் மணிகண்டேசுவரா
தியான மனோலயம் ஆக வேண்டும்
காமமும் கர்மமும் லோகமும் மோகமும் - உன்
பாத பக்தியாய் மாற வேண்டும் (கல்லும்)

==============================================================

## பிரகாசச் சூரிய கதிரொளியில்

பிரகாசச் சூரிய கதிரொளியில் சிவந்து
சிரிக்கும் பொன் ஆகாயம்
கரிமலை இளங்குளிர் சோலையிலே தங்கிடும்
சபரி க்ஷேத்திரமே

மந்த்ரம் விண்முட்டி ஒலிக்கும் தேவ வசந்தத்தினூடே
சங்கம சொப்பனங்கள் சங்கீதம் தேடும்
சங்கம சொப்பனங்கள் சங்கீதம் தேடும் அருண
முகூர்த்தத்தினூடே (பிரகா)

பிரபஞ்சம் சுசுருதி தேடும் தேவிரநிசாதத்தினூடே
ஜீவன சங்கீதம் மோட்சத்தைத் தேடும்
ஜீவன சங்கீதம் மோட்சத்தைத தேடும்
வேதமாம் ஞானத்தினூடே (பிரகா)

நாதம் சரணமந்திரம் மூழும் கோயில் பிரகாரங்களினூடே
மௌன ராத்திரிகள் பௌர்ணமி தேடும்
மௌன ராத்திரிகள் பௌர்ணமி தேடும்
திவ்யானபூதினூடே (பிரகா)

---

## தகிர்தித்தான் தோட்டத்தில் முக்கண்ணன்

தகிர்தித்தான் தோட்டத்தில் முக்கண்ணன் திருமலையின்
ஸ்ரீமூலத் திருமரமாய் பூத்து நிற்க
பகவான் பூஞ்சுவடில் பூஜித்த யவன கன்னிகையை
ஜீவ கலகமாய் பாவிக்க
தேவ மகரந்தம் ஸ்ரீ ரூப அலங்காரம்
வாபராய் பூமியில் பிறப்பெடுத்தான் (தகிர்)

நாலாம் வேதத்தின் பொருளறிந்து
மானிட நட்பெனும் ஆனந்த தத்துவம்
அத்வைத ரூபனாம் ஐயனின் தோழனாகி
பந்தள பெரும் படைக்கு தலைமை தாங்கி (தகிர்)

உதயனைப் போரில் வென்று பூஜை செய்தான்
வாபர் பகவானின் பாதாரவிந்தமே
குருசபரீசனின் தாஸானு தாஸனாக
எரிமேலி பேட்டையில் பள்ளி கொண்டான் (தகிர்)

---

## பருவங்கள் ஆறும் பம்பாநதியில் குளித்து திருப்படி

பருவங்கள் ஆறும் பம்பாநதியில் குளித்து திருப்படி ஏறும்
கரங்கள் ஏழின் அலைமுறை எல்லாம் பாதசரணம் பாடும் (பருவ)

நாமம் கேட்கும் ரசம் ஐயனின் நாமம் கேட்கும் சுகம்
ஆடும் மலைமுகில் சூடும் மலையினில் தவழும் இளந்தென்றல்
அடவிகள் தாளமுணர்த்தி பாடும் பதவஜனம் புண்யம்
சபரீசன் பதவஜனம் புண்யம் (பருவ)

அழகின் இருமுடி ஏந்தி ஆனந்தக் கண்ணீர் தெளிக்கும் மேகம்
வானவில் தம்புரு மீட்டிப்பாடும் பதமலர்கள் சரணம்

ஐயனின் பதமலர்கள் சரணம் (பருவ)

தங்க கம்பி முறுக்கி பூபாளராகமாலாபனை உதயம்
மண்டல கால புது மொழியாகும் நாம ஸ்வரண சுகம்
ஐயப்பன் நாம ஸ்வரண சுகம் (பருவ)

---

## மகிஷியைத் தெய்வீகக் கருணை

மகிஷியைத் தெய்வீகக் கருணை கொண்டொரு
தேவ கன்னிகையாக்கி-தேவியை
மாளிகைப் புறமேற்றி இடது பாகம் தந்து
உலக மாதாவென்று வாழ்த்தி-ஐயன்
பிரம்மச்சர்ய கோலம் கொண்டான் (மகிஷி)

ஸ்ரீராமசுவாமிக்கு காய்கனி நெய்வேதித்த
சபரியாம் சத்யாத்ரி புத்ரி
கடித்து ருசி பார்த்து நெய்வேதித்த பாபமோ
சபரியை யுகங்களாய் குருபியாக்க
சபரியை கலியுக ராஜகுமாரன்
மரகத அழகியாய் தோற்றுவித்தான் (மகிஷி)

சதியாகப் புலிப்பாலை கேட்டோர்க்கும் கூட
அஷ்டைசுவர்யங்களைத் தந்து-மாயாய்
இருள் கொண்ட பந்தள ராணியை
விஸ்வரூபத்தால் அனுக்ரஹித்து
அசுர கர்மத்தால் விளையாடின வாபருக்கு
அத்வைத உபதேசம் செய்தான் (மகிஷி)

---

## ஆயிரம் ராகம் ஆயிரம் தாளம்

ஆயிரம் ராகம் ஆயிரம் தாளம்
ஆயிரமாயிரம் பல்லவிகள்-அதில்
ஏகாந்த மோன ஸ்ருதியாய் நிற்கும்
ஓங்கார நாதமாம் சபரிமலை (ஆயிரம்)

நீலாகாசமும் மரகத பூமியும் ஆனந்த சங்கீத தாரையாக
அர்ச்சனை மந்திரமும் ஜீவநாளங்களும் உன்முன்னால்
கைகூப்பி தொழுதிடவே மனமுருகி மெய்மறந்து நின்றேனே
நான் ஊமை அமுதம் ருசித்தது போல் (ஆயிரம்)

கோடி ஜென்மங்களில் இரவும் பகலும் சிந்திய கண்ணீர்
உறைந்ததாவா-அருளொளி மணிகண்டன் பாதங்கள்
அலங்கரிக்க துளசி இலை கண்ட பாக்கியம் தர்சன பாக்கியமாம்

தீர்த்த முன்டேனே நான் ஊமை இனிப்பு உண்டது போல் (ஆயிரம்)

======================================================================

## சூரிய சந்திரனின் கண்ணழகோடு

சூரிய சந்திரனின் கண்ணழகோடு
அரிமா தேவனின் மெய்யழகோடு
சங்கு கழுத்திலோ பொன்மணியோடு
பஞ்குனி மாதத்தில் உத்திர நாளில்
பஞ்சமி திதியில் பிறந்தானய்யன் (சூரிய)

எங்கெல்லாம் சென்றவன் வந்தான் - ஐயன்
என்னென்ன கோலம் எடுத்தான்
பாதிரத்தின் மலையில் கருங்காடு கலக்கி
பாண்டிக் கரிமலையில் வேட்டையாடினான் - அரசன்
பம்பை நதிக் கரையோரத்திலே குழந்தை
மணிகண்டனைக் கண்டெடுத்தான்
கண்மணியாய் அரண்மனையில் வளர்ந்தான் ஐயன்
குழந்தை இளவரசாய் பந்தளத்தில் வாழ்ந்தான் ஐயன்
அரண்மனையில் வளர்ந்தான் ஐயன்
பேர் பெற்ற பந்தளத்திளவரசன் - அன்று
காட்டுக்குப் போனது ஏனய்யா
புலிப்பால் பெறப் போனதும் வந்ததும் எப்படி ஐயா
காடேறிப் போகையில் யையனின் முன்பும் பின்பும்
ஆயிரம் பூதத் திருக்கூட்டம்
மங்கை மகிஷியைக் கொன்று திரும்பும்போது
ஆயிரம் தேவர்கள் அப்புறமும் இப்புறமும்
உலகோரும் மேலோரும் மகிழ்ந்தாட யையன்
சபரிமலையிலே எழுந்தருளி கோயில் கொண்டு
அப்பன் அருள் கொடுப்பான்

---

## சரக்கொன்றை பூத்திருக்கு

சரக்கொன்றை பூத்திருக்கு - சித்திரை
சரக்கொன்றை பூத்திருக்கு
சபரி மாமலையில் விசுக்காலை (சரக்)

பக்தி கனிதும்பை பூத்திருக்கு - சபரிமலையில்
கனி தும்பை பூத்திருக்கு
நெய்யமிர்தமிர்தம் நெய்யமிர்தமிர்தம்
நெய்யமிர்தமிர்தம் நெய்யமிர்தமிர்தம்
நெய்யமிர் தமிர் தமிர் தமிர் தமிர் தம் (சரக்)

நெய்யமுதக் குடமெடுத்து காயத்ரி மந்த்ரம் சொல்லி

இருட்டு நிற கருப்புடுத்தி பனி இரவில் விளக்கேந்தி - சூர்யன்
சபரிகிரி தன்னில் முகில்முடிகளில் இருவிழிகளில்
மலரடிகளில் விசு சங்கராந்தி - மலையில்
பரமபக்தி கனி தும்பை பூத்திருக்கு
நெய்யமிர்தமிர்தம் நெய்யமிர்தமிர்தம்
நெய்யமிர்தமிர்தம் நெய்யமிர்தமிர்தம்
நெய்யமிர்தமிரதம தமிர தமிர தமிர தம (சரக)

---

## திருநீல கண்டழகன் நல்லப்பன்

திருநீல கண்டழகன் நல்லப்பன்
பாற்கடல் பரந்தாமன் நல்லம்மா
வேல் முருகன் செல்லத்தம்பி
பிள்ளையாரின் நல்லதம்பி
வேட்டையில் திருமகனே ஹரிஹரசுதன்
ஐயன் ஐயன் ஐயப்பா (திரு)

ஐயன் ஐயன் ஆனந்ததித்தோம்
ஐயன் ஐயன் ஆனந்த தித்தோம்
தித்தோம் தித்தோம் தித்தோம் தித்தோம்
ஐயன் ஐயன் ஆனந்ததித்தோம்

உன் வாக்கு வலுத்தது போல மெய்யவனே
பஞ்சவர்ண கோலமிட்ட நல்தீபம்
நெற்றிமேல் பஞ்சமி கலையழகு
பொற்பாதம் சரணமென்று குலுங்கும் நற்சிலம்ட (ஐயன்)
பேட்டை துள்ளி சரங்குத்தி வினையொழிக
கரிமலையில் கழுந்துடியில் தாளம் தருக
கன்னி நான் மலையேற் பலம் தருக
அழைக்குமுன் ஓடிவரும் யைப்பனே வரம் தருக

ஐயன் ஐயன் ஆனந்ததித்தோம்
ஐயன் ஐயன் ஆனந்த தித்தோம்
தித்தோம் தித்தோம் தித்தோம் தித்தோம்
ஐயன் ஐயன் ஆனந்ததித்தோம் (திரு)

=============================================================

## கொட்டி முழக்கிடுவோம் பம்பை கொட்டிமுழக்கிடுவோம்

சாமியே ஐயப்போ ஐயப்போ சாமியே
சாமி பாதம் ஐயப்பன் பாதம்
தேகபலம் தா பாதபலம் தா
கள்ளும் முள்ளும் காலுக்குமெத்தை
சாமியைக் கண்டால் மோட்சம் கிட்டும்
சரணம் சரணம் சாமிசரணம்

சரணம் சரணம் ஐயப்பசரணம்
கொட்டி முழக்கிடுவோம் பம்பை கொட்டிமுழக்கிடுவோம்
ஆட்டமாடிட சாமி பாட்டுப்பாடிட
சாமிசரணம் ஐயப்ப சரணம்
வந்தோம் ஐயப்பா சாமி ஐயப்பா (கொட்டி)
சமதர்ம சாஸ்தாவைப் பாடிட தர்மமும் செழித்து ஓங்கி ஆடிடும்
சாமியே சரணம ஐயபபா
புவிமேல் அவன்புகழைப்பாடிட பூவுலகம் மகிழ்ந்து எங்கும் ஆடிடும்
சந்தனகுங்கும வாசனைகமழ சந்தங்கள் பாடுவோம்
தாளங்கள் தட்டிட நாதங்கள் முழங்க பாதம் போற்றுவோம் (கொட்டி)

தென்றலில் மலரின்மணம் வீசிட வளங்கள் செழித்து நிறையும் எங்குமே
சாமியே சரணம் ஐயப்பா
சிந்தையில் ஹரிகரசுதன் வந்திட செல்வங்கள் பெருகிடுமே நாளுமே
பந்தளன் கண்ட இளம் தத்துவப்பிள்ளையை சந்ததியும் துதிப்போம்
காந்த மலைதனில் ஜோதிமயமாக காட்சி தந்திடய்யா (கொட்டி)

---

## சுவாமியே சரணம் ஐயப்பசரணம்

சுவாமியே சரணம் ஐயப்பசரணம்
சுவாமியே சரணம் ஐயப்பசரணம்
பம்பாநதியில் தீர்த்தமாடி வந்தோமே
அருள் நாடியே ஐயப்பா சுவாமியே (சுவாமியே)

பம்பா நதியில் தீர்த்தமாடி வந்தோம்
நெய்யாலுருகி மின்னும் ஜோதி பொன்னார் மேனியிலே
மெய்யாலுருகி சரணம் சொல்லி அழைத்த வேளையிலே
சாந்த வடிவாய் வருகிறான் ஐயப்பா சுவாமியே (சுவாமியே)

பம்பா நதியில் தீர்த்தமாடி வந்தோம் ஐயா
சரணம் சரணம் என்றே ஒலிக்கும் உன் சபரிமலையினிலே
தரணி எங்கும் தழைத்து ஓங்கும் கருணைப் பார்வையிலே
ஞானவடிவாய் வருகிறாய் இறைவா சுவாமியே (சுவாமியே)

==================================================

## புல்லாங்குழலில் புதுஇசை பிறந்தது

புல்லாங்குழலில் புதுஇசை பிறந்தது
புலரும் பொழுதே வா சபரிமலை
பூவண்ணச்சோலையும் தாவிடும் மான்களும்
காவியக் காட்சிதான் சபரியின் மாமலை
ஹரிகர சுதனின் திருமாமலை
கற்களும் கனியாகும் சொற்களும் சுவையாகும் சத்யசீலனின் சபரிமலை
நித்திய வாழ்வாக நிம்மதிப் பொருளாக நெஞ்சினில் நிறைவாகும் சபரிமலை

நித்திய வாழ்வாக நிம்மதிப் பொருளாக நெஞ்சினில் நிறைவாகும் சபரிமலை
நற்பதம் துணையாகி விளையாடும் அற்புதம்
பொற்பத மணிகண்டன் யோக நிலை (புல்லா)

பஸ்ம குளத்தினிலே பக்தியாய் மூழ்கிடவே தத்துவஞானஜோதி தரிசனம்
கற்பூர ஆழியில் கமண்டிடும் நெய்மணமே கலந்த
மணம் தரும் மலர்களிலே
வான்முகில் தழுவிடும் கோபுரக்கலசங்கள்
காண்பவர் கண்களிலே ஆனந்தமே (புல்லா)

=========================================================================

## ஆயிரம் கோடி தாரகை சேர்ந்து

ஆயிரம் கோடி தாரகை சேர்ந்து
பூரண ஒளிதரும் பூநிலவே
மார்கழி மலராய் வான் வழிமீது
காண்கின்ற நிலவே கண்மலராய் (ஆயிரம்)

தத்தித்தத்தி நடைபயன்று தரணியை அளப்பவனே
சங்கத்தமிழ் இசையில் தாலேலோ
முல்லை இதழ் விரிய முத்துச்சரமணிந்து
கொத்துமணிஅசையும் செல்வ மணியே செல்வமணியே (ஆயிரம்)

மாலை மலர் மணத்தில் மதிமுகம் எழில்பூத்து
தாலாட்டும் தென்றலில் தாலேலோ
நாளை வரும் வாழ்வு நல்வாழ்வு நீ அறிவாய்
நலம்பெறத் தொட்டிலே ஐயப்பனே கண்மலராய் (ஆயிரம்)

=========================================================================

## ஐயா உனையே பணிந்தேனே

ஐயா உனையே பணிந்தேனே
ஆறுதல் வழங்கி அருள்வாயே
மனமே உரகிடப் பாடுகின்றேன்
மாமலை ஜோதியே சரணமய்யா (ஐயா)

உள்ளத்தில் அமைதியும் உடலினில் உறுதியும்
நல்லதே நினைவினில் வேண்டுமய்யா
கற்பகத் தருவாகி கருணையில் கடலாகி
வரம் தந்து நீயே காத்திடய்யா
சொந்தபந்தம் யாவும் நீயே சொல்லும் சுகங்கள் யாவும் நீயே
வளம் நலம் தருவாய் நீயே வாராய்தேவா (ஐயா)

தொட்டதுதுலங்கிடவும் சொல்லினில் அருள் வேண்டும்
தித்தித்திடும் நினைவு தினம் வேண்டும்
பக்தியுடன் உனைப்பாட பக்தனுக்கு வேண்டியதை

பரிவுடன் அருள்வாய் பகவானே
கல்லும் முள்ளும் எனக்கு மெத்தை காடும் மலையும் எனக்குசோலை
மதியும் மகிழ்வும் தருவாய் நீயே வாராய் தேவா (ஐயா)

---

## உள்ளத்தில் உன்னையே தெய்வமாய் எண்ணியே

உள்ளத்தில் உன்னையே தெய்வமாய் எண்ணியே
சன்னிதானம் நாடியே சரணடைந்தேன்
அருளை அள்ளி அள்ளி தந்து காக்கவே
மலைமேல் அமர்ந்திருக்கும் இறைவா
ஐயப்பா ஸ்ரீசிவஹரி பாலா (உள்ள)

பந்தளத்தின் மன்னனே பார்புகழ்நாதனே
எந்தன் மனம் வாழ்த்திப்பாடும் தேனமுதே
கைகுவித்து வணங்கிட மெய்குளிரச் செய்பவனே
தைமகரஜோதியான ஆண்டவனே
சத்தியத்தின் நாயகன் புத்திரத்துப்பிறந்ததை

வண்ணமலர் சோலையாம் வையகமும் வாழ்த்துதே
ஐயா சரணம் ஆண்டருள் என திருவடி பணிந்தேன் (உள்ள)

விண்ணகத்தின் நிறங்களே உந்தன் நிறமாகும்
மண்ணகத்தின் மைந்தனே மாமணியே
என்னகத்தில் உண்மையாய் இருந்திடும் இறையுணர்வே
எண்ணங்களில் கருப்பொருளாய் வாழ்பவனே
சன்னதி வணங்கினேன் சந்ததி வாழ்ந்திட
கருணையின் காட்சியே அடியவர் மாட்சியே
ஐயா சரணம் ஆண்டருள் எனசேவடி தொழுதேன் (உள்ள)

---

## வெண்பனிக் குளிரினில் பொதிகைமலை

வெண்பனிக் குளிரினில் பொதிகைமலை
மென் தென்றல் வீசிடும் சபரிமலை
விண்ணவனும் போற்றிடும் கண்கொள்ளாக்காட்சியே
காந்தமலைஜோதி ஐயப்ப சுவாமி (வெண்)

சுடரும் விளக்கொளியில் அருள் வடிவாய்
தூண்டா மணி விளக்கின் எழில் உருவாய்
வேண்டியவர் வேண்டியதை ஐயப்பன் தந்திடுவான்
கீதங்கள் பாடிச் செல்வோமே சபரிமலை (வெண்)

நம்பிய பக்தர்களின் நாயகனாய்

நலிந்தவர் வாழ்வினிலே நலம் தருவான்
இருமுடி தாங்கியே திருவடி காணவே
அடியவர் ஒன்றாய் அடைவோமே சபரிமலை (வெண்)

======================================================================

### குழலூதும் குருவாயூர்க் கண்ணனே கண்ணனே

குழலூதும் குருவாயூர்க் கண்ணனே கண்ணனே
தேன்மதுரம் உன்கீதம் பாடிய தெய்வீகம்
உலகினை வலம்வரவே கதிரவன் எழுந்தானே
பறவைகள் பாடியதே சுகராகம் சுககீதம் (குழலூ)

விப்ரபூஜ்யம் விஷ்வவர்த்யம் விஷ்ணு சம்பூர் ப்ரியம் சுதம்
விப்ர ப்ரசாத விரதம் சாஸ்தாரம் பிரணவாம்யகம்
யமுனாவின் கரையோரம் குழலோசையே கேட்டு
எழில் ராதை உடன் சேர்ந் இசை பாடுவாள்
பசும்சோலை அதில்மறைந்து விளையாடுவான்
வருவாய் கண்ணா வருவாய் கண்ணா
என்றே ராதை உனைத் தேடுவாள்
வண்டு விழிப்பேரெழிலை ஆயர்கள் குழக்கொழுந்து
வண்ணமுகில் கண்ணனவன் கண்டுரசிப்பான்
வாரி அணைப்பான் (குழலூ)

மதுராபுரி மாதவனே மதுசூதனா
வராபுரி கிரிதாரி உடுப்பி கிருஷ்ணா
குருவாயூர் தனில் வாழும் நவநீதனே
சமதர்மம் நிலையாகும் உன்ஆலயம்
சகலருமே வணங்கும் பொதுஆலயம்
ஒருமுறை இது சமயம் நிறைகுடம் துதித்திடவே
வரம் தரவேண்டுகிறேன் குருவாயூரப்பாகோபாலா (குழலூ)

===========================================================================

### யானைமேல் அம்பாரிகாணவே ஆனந்தம்

சரணம் சரணம் ஐயப்பா சாமிசரணம் ஐயப்பா
சாமிசரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
யானைமேல் அம்பாரிகாணவே ஆனந்தம்
ஐயப்பன் திருக்கோலம் ஆனந்தம் ஆனந்தம்
நல்லகுல தெய்வமய்யா ஐயப்பா
நாளும் நம்மை காத்திடும் ஐயப்பா (யானை)

எரிமலைப்பேட்டை துள்ளி காளைகட்டி வணங்கிவிட்டு
அழுதைமலை நதியடைந்து தள்ளிப்போ கல்லிடும் குன்றில்
உடும்பாறை மலையுச்சி கரிவலம் தோடும் தாண்டி
கரிமலைமீது ஏறி பம்பைநதி அடைந்தோம் (யானை)

கண்ணிமூலகணபதியை வணங்கியே நீலிமலை கடந்தோம்
அப்பாச்சி இப்பாச்சிதனை அடைந்தோம்
சபரிபீடம் கண்டு சரங்குத்தி தொழுது நின்றோம்
சன்னிதானம்சென்றடைந்தோம் சாமியை சரணடைந்தோம் (யானை)

---

## குயில் கூவும் காலையில் மயிலாடும்

சாமியே சரணம் ஐயப்பா சாமியே சரணம் ஐயப்பா
சாமியே ஐயப்பா ஐயப்பா சாமியே
பகவானே பகவதியே தேவனே தேவியே
ஏற்றிவிடய்யா தூக்கிவிடய்யா
சாமியே ஐயப்போ ஐயப்போ சாமியே
குயில் கூவும் காலையில் மயிலாடும் வேளையில்
புலிமீது வலம் வரும் ஐயப்பா
தேமாகி வென்றிட பயமில்லை என்றிட
உனைப்பாடி பணிந்தோம் ஐயப்பா (குயில்)

சாமியே ஐயப்போ யைப்போசாமியே
நீரோடும் ஓடையில் நீராடிக்குளித்து
பார்போற்றும் கணபதி பாதங்கள் தொழுதோம்
சாமியே சரணம் யைப்பசரணம்
வேல்கொண்ட முருகனை நெஞ்சாரநினைந்து
வெள்ளிப் பணித்தலைவயன் பாதங்கள் வணங்கி
வேங்கடமலையன் திருவடியின் வேண்டிட நன்மைபெருகிவர
காத்தருள்வாய் தெய்வமே சபரிநாதா (குயில்)

பூஞ்சோலைப் பறவைகள் சரணங்கள் பாட
பூத்தனமலர்கள் பொன் வண்டு இசைக்க
சாமியே சரணம் யைப்ப சரணம்
ஆதாரநாயகனின் அடிமலர் துதிக்க
ஐம்பொலி செயல்களை ஒரு முகமாக்கும்
கலியுக தெய்வம் நிதானய்யா கண்கண்டதெய்வம் நீதானய்யா
ஏழைப்பங்காளனய்யா சபரிநாதா (குயில்)

---

## ஹவாராஸனம் விஸ்வமோகனம்

ஹவாராஸனம் விஸ்வமோகனம்
ஹரிததீஸ்வரம் ஆராத்யபாதுகம்
அரிவிமர்த்தனம் நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே

சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா

சரண கீர்த்தனம் சக்தமானஸம்
பரண லோலுபம் நர்த்தனாலஸம்
அருண பாஸீரம் பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே

சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா

களம் ருதிஸ்மிதம் ஸீந்தரானனம்
களப கோமளம் காத்ர மோகனம்
களபகேசரி வாஜிவாகனம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே

சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா

ஸ்ரீஜனபிரியம் சிந்திதபிரதம்
ஸ்ருதி விபூஷனம் ஸாது ஜீவனம்
ஸ்ருதி மனோகரம் கீதலாலஸம்
ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே

சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா
சரணமய்யப்பா ஸ்வாமி சரணமய்யப்பா

---

## மூகாம்பிகைத் தாயே அருள்நாயகி

மூகாம்பிகைத் தாயே அருள்நாயகி
முகிலாடும் கொல்லூரின் திருநாயகி
அடியேனிதய தாமரை இதழ்களில்
அவதரிப்பாய் தேவி அருள்தருவாய் (மூகாம்பிகை)

காலத்தை வெல்லும் கலைகளக்கெல்லாம்
ஆதாரம் நீயல்லவோ
அழியா இலக்கிய அற்புதப்படைப்புக்கு
அட்சயப்பாத்திரம் நீயல்லவோ (மூகாம்பிகை)

காதுக்கு அமுதம் கண்ணுக்கு கற்பூரம்
கானக எல்லை மனோகரம்
தம்பூர் மீட்டிபருவங்கள் நடக்கும் - உன்
மணிவாசலில் செந்தூரம் (மூகாம்பிகை)

=======================================================

## சித்திரைத் திங்கள் முதலாம் செவ்வாய்

சித்திரைத் திங்கள் முதலாம் செவ்வாய்
மாணிக்க வல்லிக்குத் திருக்காப்பு
நித்திரை கலைந்து நெஞ்சம் மகிழ
அவளே நமக்குப் பாதுகாப்பு
விண்ணாய் மண்ணாய் விரிந்தவளே மாணிக்கநாச்சி அம்மா

காற்றாய் நீராய் நிறைந்தவளே மாணிக்கநாச்சி அம்மா
நெருப்பாய் நின்று ஒளிர்பவளே மாணிக்கநாச்சி அம்மா
பஞ்ச பூதமாய் பரந்தவளே மாணிக்கநாச்சி அம்மா (சித்திரை)

மன்னர்கள் வணங்கும் மாமயிலே - எங்கள்
மரகதவல்லிப் பூமயிலே
இன்னிசை எழுப்பும் பூங்குயிலே
இன்னருள் வழங்கிட வாமயிலே (சித்திரை)

உலகைப் படைத்த மறையவளே - எங்கள்
உள்ளக் கோவிலில் உறைபவளே
நெஞ்சில் என்றும் நிறைபவளே
நிம்மதி எமக்குத் தருபவளே (சித்திரை)

---

## மாணிக்க வல்லி ஆடுகிறாள் மல்லிகைப்பூ ஊஞ்சலிலே

மாணிக்க வல்லி ஆடுகிறாள் மல்லிகைப்பூ ஊஞ்சலிலே - அந்த
மரகத வல்லி ஆடுகிறாள் மாணிக்கப்பொன் ஊஞ்சலிலே (மாணிக்க)

மேனியில் சூடிய பூக்களெல்லாம் - தலை
மெல்லக் கவிழ்ந்து கொண்டதம்மா
மாணிக்க வல்லியின் பேரழகில் - அந்த
மலர்களுக்கே நாணம் வந்ததம்மா (மாணிக்க)

ஊஞ்சலில் அவளைப் பார்க்கையிலே - எங்கள்
உள்ளமும் ஊஞ்சலில் ஆடுதம்மா
கங்கை நதியே பாயுதம்மா - இன்பக்
கானமும் காதினில் கேட்குதம்மா (மாணிக்க)

பொன்னகை ஆயிரம் இருந்தாலும் அவள்
புன்னகை ஒன்றே போதுமம்மா
புவியினை என்றும் காக்குமம்மா - நமக்கு
பொருளும் புகழும் சேர்க்கும் அம்மா (மாணிக்க)

## மாணிக்க வல்லிக்குத் தேரோட்டம்

மாணிக்க வல்லிக்குத் தேரோட்டம்
மனசுக்குள் மகிழ்ச்சி நீரோட்டம்
கன்னிப் பெண்களின் கோலாட்டம் - அங்கே
களிப்புடன் நடக்குது கரகாட்டம் (மாணிக்க)

பால்குடம் காவடிபோகையிலே - நம்ம
பாதமும் போகுது தன்னாலே
பூக்குழி நெருப்பும் சுடுவதில்லை - அவள்
பொய்மையை நெருங்க விடுவதில்லை
பௌர்ணமி முகத்துப் பேரழகி - இந்த
பாரே போற்றும் சீரழகி
சிலையென சமைந்த சேல்அழகி - அவள்
சிந்தும் புன்னகைக் கலை அழகி (மாணிக்க)

படம்புடிச்சு எல்லோரும் மனசுக்குள்ளே
பதிச்சு வச்சமுத்து மாணிக்கம்
தேருவடம் புடிக்க வாருங்கய்யா - இங்கே
அவநெஞ்சில் இடம்புடிக்கச் சேருங்கய்யா
பூவைமுடித்த பூங்குழலி - அவ
புதுமை படைக்கும் தேன் குழலி
அலையெனத்தவளும் கார்குழலி - என்றும்
அவளே மாணிக்க முத்தழகி (மாணிக்க)

================================================================================

## மாணிக்க வல்லியை நெனச்சிக்கிட்டா

மாணிக்க வல்லியை நெனச்சிக்கிட்டா - நம்ம
மனசில பாரம் இருக்காது - அந்த
மகராசி பேரைச் சொல்லிப் புட்டா - எந்த
மாயமும் கிட்ட நெருங்காது (மாணிக்க)

துக்கமும் துயரமும் மறைந்து விடும் - வரும்
துன்பங்கள் அனைத்தும் நீங்கிவிடும்
சொல்ல முடியாத சோகமெல்லாமே
சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடும் (மாணிக்க)

நன்மைகள் எல்லாம் கூடிவிடும் - இந்த
நாட்டினில் மழையும் பெய்துவிடும்
தீமைகள் எல்லாமே தீய்ந்துவிடும் - இந்த
தேசத்தில் வளங்கள் பெருகிவிடும் (மாணிக்க)

தேவியின் தரிசனம் கிடைத்தாலே - நம்ம
தேவைகள் அனைத்தும் கிடைத்துவிடும்
தென்றலும் அங்கே மிதந்து வரும் . இன்ப
தேனிசை அதிலே கலந்துவரும் (மாணிக்க)

## பல்லாக்கு பூப்பல்லாக்கு பல்லாக்கு பூப்பல்லாக்கு

பல்லாக்கு பூப்பல்லாக்கு பல்லாக்கு பூப்பல்லாக்கு
மாணிக்க நாச்சி அம்மனுக்கு மலர்களால் செய்தபல்லாக்கு (பல்லாக்கு)

மல்லிகை முல்லை மருக்கொழுந்து சம்பந்தி சாமந்தி செவ்வந்தி
கதம்பம் ரோஜா கனகாம்பரம் தாமரைப்பூவு வாடாமல்லி
கொத்து மலர்கள் புடைசூழ கோதை நாயகி வலம் வருவாள்
இன்னிசை தம்மேளம் முழங்க ஏழிசை நாயகி வலம் வருவாள் (பல்லாக்கு)

நந்தவனமே நடந்துவரும் அதிசயமிங்கே நடக்குது - அதில்
மாணிக்க நாச்சியா கொலுவிருக்க அருள் ஆட்சியே நடக்குது

கல்யாணம் ஆகாத பெண்களுக்கு தாலியெடுத்து அவகொடுப்பா
காடுவயல் விளையவச்சு கண்ணீரையே துடைச்சுவிடுவா (பல்லாக்கு)

பத்தாம்நாளு சத்தார்ணம் பார்க்குமிடமெல்லாம் உற்சாகம்
முத்து முனியய்யா சன்னதியில் வீரவிளையாட்டு மஞ்சுவிரட்டு
இன்னிசைநாதம் மேளம் முழங்க ஏழிசை நாயகிவலம் வருவாள்
தென்பாண்டி நாடே திரண்டு வரும் பூந்தோட்டம் இன்பத்தேரோட்டம் (பல்லாக்கு)

---

## புன்னகை செய்வாள் மாணிக்கவல்லி

புன்னகை செய்வாள் மாணிக்கவல்லி வாழ்வில்
புதுமைகள் தருவாள் மரகதச் செல்வி
மென்னகையாலே உலகை அளந்து
மேன்மைகள் தருவாள் தேன்மலர்குழலி (புன்னகை)

கோடிநலன்கள் படைப்பவளே - எங்கள்
கோமள வல்லி சிரிப்பவளே
தேடித்தேடி வருவோர்க்கு
தேவைகள் அறிந்து கொடுப்பவளே (புன்னகை)

ஆடும்மயிலாய் வருபவளே - தினம்
ஆனந்தம் அள்ளித் தருபவளே
பாடும் குயிலாய் பறப்பவளே
ஓடும் நதியாய் பாய்பவளே (புன்னகை)

வாடாமலராய் மணப்பவளே - என்றும்
வாடும் மனிதரைக் காப்பவளே
ஈடாமணியே நிரந்தரியே
சுந்தரலோகத்தின் சௌந்தரியே (புன்னகை)

## திருப்பரங்குன்றத்தில் திருமணமாகி

திருப்பரங்குன்றத்தில் திருமணமாகி
சேவல்கொடி அசைய சிரிக்கின்றான்
அருள் வடிவாகி அகிலம் மகிழ
ஆனந்த வைபவம் முருகனின் கோலமே
அழகனின் தரிசனம் அடியவர் சிலமே (திரு)

மலராய் மணமாய் மதியாய் எழிலாய்
ஒளிவீசிடும் ஞானமானவன் ஓங்காரம் பிரணவமானவன்
தெள்ளுதமிழ் பாட்டி இசையாய்
தித்திக்கும் ஒலியினில் தேனாய்
அன்னைசிவ பாலன் நம்மை தினம் காக்க
எண்ணிய போதில் வந்திடுவான் (திரு)

குருவாய் அருள்வாய் திருவாய் வருவாய்
குகனே குருநாதனே வாவாகுமரா சண்முகனேவாவா
வளரும் கருவினில் உயிராய்
வளர்ந்து உலகினைக் காப்பாய்
அணுவிலும் அணுவாகி ஆதாரஸ்ருதியாகி
ஆனந்த நிலையை அருளிடுவாய் (திரு)

---

## மயிலாடும் மலையோரம் விளையாடி நிற்கின்ற முருகாவேல் முருகா

மயிலாடும் மலையோரம் விளையாடி நிற்கின்ற முருகாவேல் முருகா
மயிலாட்டம் கரகாட்டம் ஒயிலாட்டம் ஆடியே வந்தோம் உனைக்கண்டோம்
ஆனந்தம் பரவசமே வாழ்வில் வந்துகாக்கும் தெய்வமே
எனை ஆளும் தெய்வமே (மயிலாடு)

முல்லைமலர் சரம்தொடுத்து மல்லிகை மாலைகட்டி
தெள்ளுதமிழ் காவடிச் சிந்து பாடிவந்து உனை அடைந்தோம்
வந்தவர்க்கு வேண்டும் வரம் தந்தருளும் கந்தசாமி
உந்தன் முகம் உந்தன்பாதம் கண்டேன் முருகைபா
மனம் மகிழ்ந்தேன் உனைத்தொழுதேன் (மயிலடு)

தேனிசையில் வாழ்த்துபாடி வெண்ணிலவு வானில்வர
தென்பொதிகைத் தென்றலிலே தேர்மீது வலம் வருவாய்
முத்தமிழின் முதல்வனாக செந்தமிழின் செல்வனாக
பிள்ளைத்மிழ் இசைத்தபடி வருவாய் அருள்தருவாய்
மனம்மகிழ்ந்தேன் *உனைப்பணிந்தேன் (மயிலாடு)*

## திருத்தணி மலையினிலே திருநாளாம்

திருத்தணி மலையினிலே திருநாளாம்
திருப்புகழ் பாடிடும் பெருநாளாம்
திருப்படி உற்சவம் சிவன்மகன் பொற்பதம்
தேரினில் வலம்வரவே அற்புதம் (திருத்தணி)

ஆடிமாதக் கார்த்திகையில் அன்பரெல்லாம் தேடிவந்து
பாடியே படிகளிலே பக்திசுவைப் பெருக்கிடுவார்
சரவணன் பொய்கை தனில் அழகிய முருகனுமே
திருவிழா நாளினிலே தெப்பத்தில் வலம்வருவான்
காவடிகள் ஆடிவந்து கந்தனின் திருவடியை
நாடியவர் வேண்டியதை தந்து மகிழ்வான் (திருத்தணி)

தைப்பூசத் திருநாளில் கொட்டுமேளம் முழங்கிடவே
கூட்டம் மாலையுடன் கோடிகோடி மாந்தர்வர
தணிகையில் அமர்ந்திருந்து தரணியில் நலம் விளங்க
கனிவுடன் வேண்டியதை கந்தனும் அருளிடுவான்
சித்திரையின் பௌர்ணமியில் முழுமதி வானில்வர
சாந்தமுடன் முருகனும் காட்சிதருவான் (திருத்தணி)

---

## பழமுதிர்ச்சோலைதனில் பைந்தமிழில்பாடி

பழமுதிர்ச்சோலைதனில் பைந்தமிழில்பாடி
பச்சைமயில் மீதினிலே அமர்ந்திருந்தான் தேவன்
அழகான எழில்மாது தெய்வானை குறமாது வள்ளியுமே அருகினிலே
நிலையாக அமர்ந்திருந்து அருள்தந்திடு அனுதினமும்
தொழுவோம் முருகா (பழமுதிர்)

கைகுவித்து நீரணிந்து மெய்யுருக வேண்டுவோர்க்கு
வையகத்தில் வேண்டியதை வேலவனும் தந்திடுவான்
தத்துவத்தின் முதற்பொருளை பக்தியுடன் நெஞ்சில் வைத்தால்
வித்தகனாய் விளங்கிடவே புத்திதந்து காத்திடுவான்
கந்தய்யா முருகய்யா வேலய்யா வா வா
குமரய்யா கார்த்திகேயா செல்லய்யா வாவா
அடியவர் குறைதீர்த்து ஆனந்த வாழ்வு தந்து
எந்நாளும் நன்னாளாய் ஏற்றமுடன் இசைச்செல்வம் தனை அருள்வாய் (பழமுதிர்)

எழுகின்ற மூச்சினிலே இருக்கின்ற முருகனையே
இதயத்தின் கோவிலிலே என்றும் வணங்கிடுவோம்
செல்லெடுத்து இசைதொடுத்து சுவையுடன் பாடிடவே
கண்திறந்து கைகொடுத்து அஞ்சேல் என்றிடுவான்
கந்தய்யா முருகய்யா வேலய்யா வாவா
குமரய்யா கார்த்திகேயா செல்லய்யா வாவா
நெடுமாள் மருகோனை நீலமயில்வானனை
நேசமுடன் வேண்டிநின்றால் நிச்சயமாவே இச்சமயம் வருவான் (பழமுதிர்)

எழுகின்ற மூச்சினிலே இருக்கின்ற முருகனையே
இதயத்தின் கோவிலிலே என்றும் வணங்கிடுவோம்
செல்லெடுத்து இசைதொடுத்து சுவையுடன் பாடிடவே
கண்திறந்து கைகொடுத்து அஞ்சேல் என்றிடுவான்
கந்தய்யா முருகய்யா வேலய்யா வாவா
குமரய்யா கார்த்திகேயா செல்லய்யா வாவா
நெடுமாள் மருகோனை நீலமயிலவாகனனை
நேசமுடன் வேண்டிநின்றால் நிச்சயமாவே இச்சமயம் வருவான் (பழமுதிர்)

==========================================================================

## சக்திச்சிவ முத்துக்குமரனே முருகா

சக்திச்சிவ முத்துக்குமரனே முருகா
உன்னைத் தேவாக உளமாற வேண்டுகிறேன்
சரவணஞான குருபரனே கந்தா கடம்பா
கண்டிகதிர் காமவேலனே வாராய்
மெய்யான தெய்வமே வேண்டுகிறேன்
எந்தன் நெஞ்சம்தானே உந்தன் திருக்கோவில்
வந்து சுருள் செய்வாய் முருகா (மெய்)

அருணகிரி வணங்க தருணத்தில் வந்து
திருசுண்ணாமலையில் தரிசனம் தந்தாய்
இராமலிங்க வள்ளலார் வேண்டி நீயும்
வடலூர்ப்பதியினில் காட்சியும் அளித்தாய்
குமரகுருபரரை பேசிட செய்தாய்
சுட்டகனிதந்து அவ்வைக்கு உரைத்தாய்
தவிக்கும் பக்தரெனை தயவுடன் காத்திடு
தாமதம் ஏன் திருமுருகையா (மெய்)

காவடி எடுத்து வந்து சேவடி தொழுவேன்
தேனால் அபிசேகம் தினம் தினம் செய்தேன்
எண்ணற்ற மலர்தொடுத்து திருவடிசேர்த்தேன்
இசையுடன் பாடல்பாடி உனையே துதித்தேன்
எனது கண்களில் கண்ணீர் பெருகிட இன்னும்
உனது திருவுளம் ஏன்தயங்குது
பக்தன் எனது நிலை உணர்ந்திடுமுருகா
சரணம் சரணம் சரவணனே (மெய்)

---

## திருச்செந்தூரின் செந்தல்முருகா

திருச்செந்தூரின் செந்தல்முருகா
இசைக்கோவிலில் குடி கொண்டவா
கடலலையோரம் நின்று அருள்செய்பவா

ஓம் சரவணபவ சரணம் (திரு)

தேவர் வணங்கிட சூரர் பொடிபட வேலை எறிந்தேகாத்தாய்
மாந்தர் பணிந்தே வேண்டும் வரங்களை வழங்கியதினம் காத்தாய்

ஞானவேலா ஞானத்தின் தலைவா
ஔவைபோற்றிய மெய்யான தேவா
சிவசக்தி பாலனே வரம் தரவா (திரு)

வண்ணமயில் மீதுஏறி என் எண்ணம் போலே வருவாய்
பன்னிருவிழிப்பார்வையாலே அருளை அள்ளித் தந்திடுவாய்
செல்வனே இசை நாதத்தின் ஸ்ருதியே
வீரனே வெற்றிவேல் ஏந்தும் சீலனே
ஐங்கரனின் சோதரனே ஆறுதலைத்தா (திரு)

தந்தைக்கு குருவாகி தந்திட்ட சுவாமிமலை
ஓம் எனும் பிரணவத்திற்கு உண்மை
தத்துவப்பொருளுரைத்து
கருணை வடிவானவா சுவாமிநாதா
சரணம் சரணம் முருகா சரணம் (தந்தை)

பக்திச்சுவை தித்திடும் தனிஉரு சக்திச் சிவ
முத்துக்குமரனையே வணங்கிடுவோம்
முத்தக்கொரு வித்தாவான் முருகன் முதல் பொருளாய்
நின்கின்ற அழகனையே நினைத்திடுவோம்
நினைத்தாலும் அழைத்தாலும் நீ
துணையாகி அருள் தரவே வருவாயப்பா
உலகம் வலம் வந்த உமையாள் மைந்தனே
சுவாமி நாதனே சரணமய்யா (தந்தை)

திங்கள் முகம் பொங்கிட நல்பொழிவுடன்
தோகையில் வாகனமதில் நீயே வா வேல்முருகா
எங்கும் வளம் பெருகிட என்றென்றும்
ஏழிசையாய்கேட்கின்ற இசைத்தமிழே மால்மருகா
பொறிவண்டு சுருதி கூட்டிடும் திருவேரகம் உரையும் திருமாலே
அறிவில் தெழிவும் அஞ்சாத உறதியும் தரவே வருவாய் முருகய்யா (தந்தை)

---

## தந்தைக்கு குருவாகி தந்திட்ட சுவாமிமலை

தந்தைக்கு குருவாகி தந்திட்ட சுவாமிமலை
ஓம் எனும் பிரணவத்திற்கு உண்மை
தத்துவப்பொருளுரைத்து
கருணை வடிவானவா சுவாமிநாதா
சரணம் சரணம் முருகா சரணம் (தந்தை)

பக்திச்சுவை தித்திடும் தனிஉரு சக்திச் சிவ
முத்துக்குமரனையே வணங்கிடுவோம்

முத்தக்கொரு வித்தாவான் முருகன் முதல் பொருளாய்
நின்கின்ற அழகனையே நினைத்திடுவோம்
நினைத்தாலும் அழைத்தாலும் நீ
துணையாகி அருள் தரவே வருவாயப்பா
உலகம் வலம் வந்த உமையாள் மைந்தனே
சுவாமி நாதனே சரணமய்யா (தந்தை)

திங்கள் முகம் பொங்கிடநல்பொழிவுடன்
தோகையில் வாகனமதில் நீயே வா வேல்முருகா
எங்கும் வளம் பெருகிட என்றென்றும்
ஏழிசையாய்கேட்கின்ற இசைத்தமிழே மரல்மருகா
பொறிவண்டு சுருதி கூட்டிடும் திருவேரகம் உரையும் திருமாலே
அறிவில் தெழிவும் அஞ்சாத உறதியும் தரவே வருவாய் முருகய்யா (தந்தை)

---

## மாதா - பிதா - குரு - தெய்வம்

மாதா
பிதா
குரு
தெய்வம்
இவை வெறும் வரிகள் அல்ல...
மாதா-மாதாவின் வயிற்றில் இருந்து பிறக்கிறோம்
பிதா- தந்தையின் அறிவினை (பகுத்தறிவு)பெறுகிறோம்
குரு - மெய் ஞான சக்தியினை அடைய வழி தேடுகின்றோம்.
தெய்வம் - உண்மை குருவின் திருவடி பணிந்து தெய்வ நிலையினை
அடைகின்றோம்.
இதன் சுருக்கம் தான் ளிலே சொல்லப்பட்டது......
...
குரு இன்றி கடவுள்நிலை கடினமே...

==============================================================================

## கப்பலோட்டும் கொல்லைக்கரானே

கப்பலோட்டும் கொல்லைக்கரானே - எங்கள்
ஐயப்பனின் அருள் பேறற்ற வாவர் சாமியே...)
(கப்பலோட்டும்)
எரிமேலி தர்மசாஸ்தா எங்கள்குறை தீர்த்திடுவார்
எரிமேலி தர்மசாஸ்தா எங்கள்குறை தீர்த்திடுவார் \
எங்கும் நிறைந்தவனாம் ஏகபோக நாயகனாம்,
(கப்பலோட்டும்)
பாவங்களை போக்கிடுவான் , பக்தர்களை காத்திடுவான்,
பாவங்களை போக்கிடுவான் , பக்தர்களை காத்திடுவான்,
பாதுஷா வேஷமிட்டு பக்கத்தில் இருந்திடுவார்,
(கப்பலோட்டும் கொல்லைக்கரானே)
பெரிகிலே பிறந்தவராம், பேரின்பம் ஆனவராம்,
பெரிகிலே பிறந்தவராம், பேரின்பம் ஆனவராம்,
கலையிலே சிறந்தவராம், அன்பருக்கு அருள்பவராம்,

(கப்பலோட்டும்)
கானகத்தின் காவலனாம், கருகமணி ஆண்டவராம்,
கானகத்தின் காவலனாம், கருகமணி ஆண்டவராம்,
எரிமேலி எல்லையிலே-ஏகமாய் ஒளிந்துகொண்டான்
(கப்பலோட்டும்)
யானை புலிகரடி கானகத்தில் குடியிருக்கும்,
யானை புலிகரடி கானகததில குடியிருககும,
வாவரின் பேரை சொன்னா விலகி வழிநடக்கும்,
(கப்பலோட்டும்)
தத்தம் குருவுடனே சவ்வாது அணிந்துகொண்டு
தத்தம் குருவுடனே சவ்வாது அணிந்துகொண்டு
வருகின்ற மனிதனையும் வாவரும் போற்றிடுவார்
(கப்பலோட்டும்)

========================================================================

**சரணம் சரணம் ஐயப்பா, சாமி சரணம் ஐயப்பா,**

சரணம் சரணம் ஐயப்பா, சாமி சரணம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா, சாமி சரணம் ஐயப்பா

சரணம் சரணம் ஐயப்பா, சாமி சரணம் ஐயப்பா
வரணும் வரணும் ஐயப்பா, மலரடி தொழுதேன் ஐயப்பா..,
(சரணம்)
சாமி சரணம் ஐயப்பா, சக்தி கொண்ட மெய்யப்பா
பூமி காக்கும் கையப்பா - பூலோக வாழ்வே உனதப்பா...,
(சரணம்)
ஆண்டுக்கு ஒருமுறை வருகின்றோம் - உந்தன் அழகு தரிசனம் பெறுகின்றோம்
வேண்டிய வரத்தை தருகின்றாய் - எங்கள் வேதனையாவும் தீர்க்கின்றாய்...
(சரணம்)
காலையும் மாலையும் நீராடி, எங்கள் கண் மலராலே கொண்டாடி
மாலையணிந்த அடியவர் - உந்தன் மலையை கடந்தே வருகின்றோம் ...
(சரணம்)
புலிப்பால் கொண்ட ஐயப்பா-கோடி புண்ணியம் நீயப்பா
கலியுக காவலன் நீயப்பா -எங்கள் கண்கண்ட தெய்வம் நீயப்பா
சரணம்
மலையில் வாழும் ஐயப்பா- எங்கள் மனதில் நிறைந்த மெய்யப்பா,
சிறியோர் குறைகள் தீரப்பா-எங்கள் சிந்தையில் தாங்கிய மெய்யப்பா,
(சரணம்)
இருமுடிப்பிரியன் நீயப்பா- எங்கள் இதயத்தில் வாழ்வது நீயப்பா,
வரும்துயர் கண்டே துடையப்பா - எங்கள் வழி துணை நீயே ஐயப்பா
(சரணம்)
ஐந்து மலைகளை கடக்கின்றோம் - நாங்கள் அழகான பம்பையில் குளிக்கின்றோம்
சங்கடம் இல்லாது வருகின்றோம்- உந்தன் சன்னதி காண துடிக்கின்றோம்
(சரணம்)
எண்திசை எங்கும் கூட்டமப்பா-உன்னை ஏற்றிபோற்றிட நாட்டமப்பா,
பன்மொழி முழங்கும் மலையப்பா - உன் பக்தர்கள் கோஷம் சரணமப்பா
(சரணம்)
நாப்பது ஒரு நாள் விரதமப்பா- உன்னை நாளும் செய்தோம் பூஜையப்பா
வாழ்நாள் முழுதும் பக்தரப்பா - என் வாழ்வு உந்தன் கருணையப்பா,

(சரணம்)
(சரணம்)
(சரணம்)

==========================================================================

## சன்னதியில் கட்டும் கட்டி

சன்னதியில் கட்டும் கட்டி
சன்னதியில் கட்டும் கட்டி,
சபரிமல காடு தேடி,
கட்டு முடி ரெண்டும் கட்டி,
காந்தமலை ஜோதி காண
சபரிமல பயணம் தானப்பா-சாமி
வழி துணையா வந்து சேரப்பா,
குரு சாமி கால தொட்டு,
கூடி ஒரு சரணம் இட்டு,
புலி ஏறும் உன்ன நெனச்சு,
புல்லரிக்க சரணமிட்டு,
காந்தமல ஜோதியனவா-எங்க -
காவலாக வந்து சேரப்பா,
கார்த்திகையில் மாலையிட்டு,
கனிவாக விரதம் வச்சு,
மணி மணியா மாலையிட்டு,
மார்கழியில் பூச வச்சு,
சபரிமல பயணம் தானப்பா-சாமி
வழி துணையா வந்து சேரப்பா.
குரு சாமி சொன்னபடி,
கூடி நல்லா விரதம் வச்சு,
கருப்ப சாமி உன்னை நினைச்சு,
காலை மாலை பூசை வச்சு,
காந்தமலை ஜோதியனவா,
எங்களுக்கு காவலாக வந்து சேரப்பா.

(சன்னதியில் கட்டும் கட்டி. )

கருப்பு பச்சை ஆடை கட்டி,
மனசுக்கொரு லாடம் கட்டி,
துளசியில மாலை கட்டி,
சரண கோஷ பாட்டு கட்டி,
சபரிமல பயணம் தானப்பா,
ரன்களுக்கு காவலாக வந்து சேரப்பா,
நீல வண்ண கட்டி,
நித்தம் உன்னை மனசில் கட்டி,
நெய் போட்டு விழாக்கு ஏத்தி,
நேரம் ஒரு பாட்டு கட்டி,
காந்தமலை ஜோதியனவா,
எங்களுக்கு காவலாக வந்து சேரப்பா,
(சன்னதியில் கட்டும் கட்டி. )
உத்தரவு வந்ததுன்னு,
ஊருக்கெல்லாம் ஓலையிட்டு,
உச்சிமலை போறதுன்னு,

உறவுக்கெல்லாம் ஓலையிட்டு,
சபரிமல பயணம் தானப்பா, - சாமி
வழித்துணைய வந்து சேரப்பா,
மூத்த குரு முடியும் கட்ட,
முத்திரையில் நெய் பிடிச்சு,
முன்னும் ஒரு கட்டும் இட்டு,
பின்னும் ஒரு கட்டும் இட்டு,
காந்தமலை ஜோதியனவா-எங்களுக்கு
காவலாக வந்து சேரப்பா.

(சன்னதியில் கட்டும் கட்டி, )
வீட்டையெல்லாம் தான் மறந்து,
காட்டை மட்டும் மனசில் வச்சு,
சொந்தமெல்லாம் தான் மறந்து,
ஜோதி மட்டும் மனசில் வச்சு,
சபரிமல பயணம் தானப்பா, - சாமி
வழித்துணைய வந்து சேரப்பா,
(சன்னதியில் கட்டும் கட்டி, )
வன்புலி புலி போல் வாகனத்தில்,
வாழையாறு வழி கடந்து,
சேர நாடு தான் புகுந்து,
சேரும் இடம் தான் நினைச்சு,
காந்தமலை ஜோதியனவா-எங்களுக்கு
காவலாக வந்து சேரப்பா.

(சன்னதியில் கட்டும் கட்டி, )
வழியில் பல ஆலயங்கள்,
வணக்கம் பல சொல்லிக்கிட்டு,
பச்சை பசேல் தோட்டமெல்லாம்,
குண்டன் முகம் பாத்துகிட்டு,
சபரிமல பயணம் தானப்பா, - சாமி
வழித்துணைய வந்து சேரப்பா,
கோட்டயத்த தான் கடந்து,
கொட்ட வாசல் மேல் ஏறி,
எரிமேலி சீமையில,
எறங்கி சும்மா பேட்ட துள்ள,
(காந்தமலை ஜோதியனவா)
(சன்னதியில் கட்டும் கட்டி, )

வாவருக்கு சலாம் போட்டு,
வண்ணங்கள பூசிகிட்டு,
சரக்கொலு ஏந்திக்கிட்டு,
சாயங்கள பூசிகிட்டு,
(சபரிமல பயணம் தானப்பா)
பச்சிலைய கட்டிக்கிட்டு,
மேல தாளம் கூட்டிகிட்டு,
திந்தகதோம் ஆடிகிட்டு,
சாஸ்தா உன்ன வணங்கிகிட்டு,
(காந்தமலை ஜோதியனவா)
பெருவழி தான் திறந்து இருக்க,
குருசாமி முன் நடக்க,
நந்தவனம் தான் வணங்கி,

பொடிநடைய தான் நடந்து,
(சபரிமல பயணம் தானப்பா)
பேரூரு தோடு மேல,
பொறி போட்டு பூச பண்ணி,
கொட்டபடி அதனிறங்கி,
ஏலஎடுது பூச பண்ணி,
(காந்தமலை ஜோதியனவா)
(சன்னதியில் கட்டும் கட்டி, )

சிவபெருமான் வந்த இடம்,
சீர்மிகுந்த காளகட்டி,
காளகட்டி, காய் உடச்சு,
அடுத்த அடி அழுத நதி,
(சபரிமல பயணம் தானப்பா)
அழுத நதி தான் எறங்கி,
ஆறுதலா தான் குளிச்சு,
அடியிலொரு கல்லெடுத்து,
ஆழி பூச பண்ணிக்கிட்டு,
(காந்தமலை ஜோதியனவா)

அசராம சரணம் சொல்லி,
அழுதமேடு அதிலேறி,
கல்லெடுத்து தூக்கிகிட்டு,
கனிவாக சரணம் சொல்லி,
(சபரிமல பயணம் தானப்பா)
இஞ்சிப்பர கொட்டையில,
இருந்து ஒரு பூச பண்ணி,
முக்கால கோட்டையில,
உக்காந்து பூச பண்ணி,
(காந்தமலை ஜோதியனவா)
(சன்னதியில் கட்டும் கட்டி, )
மூசா பெரும் மூச்செடுத்து,
முக்குளியும் தான்கடந்து,
பேச்சா உன்-பேச்செடுத்து,
பெரியமல கரிமளையும்,
(சபரிமல பயணம் தானப்பா)

கடினமப்ப கரிமளையும்,
கால்கடுக்க உச்சியேறி,
கிடிகிடுவென ஏறக்கமப்பா
குடுகுடுவென கீழிறங்கி,
(காந்தமலை ஜோதியனவா)
(சன்னதியில் கட்டும் கட்டி, )
சிறியான வட்டத்துல,
சிலுசிலுன்னு காத்துவாங்கி,
சரங்குத்தியில ஓய்வெடுத்து,
கட்டெடுத்து சரணம் சொல்லி,
(சபரிமல பயணம் தானப்பா)
பெரியமனுர் பேர் சொல்லி,
பெரியான வட்டத்துல,
சல சலக்கும் பம்பையாற்றில்,
பெருவழிக்கு நன்றி சொல்லி,

(காந்தமலை ஜோதியனவா)
(சன்னதியில் கட்டும் கட்டி, )
பம்பையில தல முழுகி,
பாவங்கள அதில்கழுவி,
அன்னதான படையலிட்டு,
அழகழக தீபமிட்டு,
(சபரிமல பயணம் தானப்பா)

கண்ணிமூலன் சன்னதியில்,
கணபதிய கைதொழுது,
«ô¿¡ô¾¡ நீலிமலை,
அய்யா உன் கைபிடித்து,
(காந்தமலை ஜோதியனவா)
(சன்னதியில் கட்டும் கட்டி, )
நீலிமல ஏத்தம் ஏறி,
அப்பாச்சிமேடு தொட்டு,
சபரிபீடம் காய் ஒடச்சு,
சரங்குத்தி அம்பும் விட்டு,
(சபரிமல பயணம் தானப்பா)
சன்னதிக்கு ஓட்டமாக,
அம்பலத்தின் வாசலிலே,
பக்கமொரு காய் ஒடச்சு,
பதினெட்டு படி ஏறி,
காந்தமலை ஜோதியனவா)
(சன்னதியில் கட்டும் கட்டி, )
பதினெட்டு படி ஏறி,
சாஸ்தா உன் முகம் காண,
அய்யா உன் நடைவாசல், நெருங்குதையா ஐயப்பா,
மெய்யாடும் திருமேனி, தெரியுதப்பா ஐயப்பா,
அய்யா உன் அழகுமுகம், தெரியுதப்பா ஐயப்பா,
ஆனந்தம் கண்ணீராய், குவியுதப்பா ஐயப்பா,
அழகுமுகம் கண்டோம் ஐயப்பா,
நாங்க ஆனந்தனே கொண்டோம் ஐயப்பா,
பொன்னான திருமேனி,சாமி சரணம் ஐயப்பா,
கண்ணோடு கலக்குதப்பா, சரணம் சரணம் ஐயப்பா,
பார்க்க பார்க்க சலிக்காதே,சாமி சரணம் ஐயப்பா,
அய்யா உன் திருக்காட்சி, சரணம் சரணம் ஐயப்பா,
சாமி சரணம் சரணம் ஐயப்பா - உந்தன்
திருவடியே சரணம் ஐயப்பா,

சாமி சரணம் சரணம் ஐயப்பா - உந்தன்
திருவடியே சரணம் ஐயப்பா,

சுவாமியே ...
சுவாமியே ...
சுவாமியே ...

================================================================

## சாமிகளே சாமிகளே சரணம் சொல்லுங்க

சாமிகளே சாமிகளே சரணம் சொல்லுங்க - அந்த
சபரிமலை ஐயனுக்கு சரணம் சொல்லுங்க.
குளத்துப்புழை பாலனுக்கு,சரணம் சொல்லுங்க
நம் குறைகள் எல்லாம் தீர்த்துவைப்பான்,சரணம் சொல்லுங்க
(சாமிகளே)
பந்தளத்து ராஜனுக்கு, சரணம் சொல்லுங்க - நம்
பாவமெல்லாம் போக்கிடுவான் சரணம் சொல்லுங்க
(சாமிகளே)
எரிமேலி சாஸ்தாவுக்கு, சரணம் சொல்லுங்க - அவன்
என்றென்றும் காத்திடுவான் சரணம் சொல்லுங்க
(சாமிகளே)
அழுதையிலே ஸ்நானம் செய்து,சரணம் சொல்லுங்க
அங்கே சபரி ஐயன் வந்தருள்வான்
(சாமிகளே)
கரிமலையில் ஏறும்போது சரணம் சொல்லுங்க
நம் கவலைகளை தீர்திடுவான்,சரணம் சொல்லுங்க
(சாமிகளே)
பம்பையிலே ஸ்நானம் செய்து,சரணம் சொல்லுங்க
சாமி பக்தியுடன் கூடி நின்று,சரணம் சொல்லுங்க
(சாமிகளே)
நீலிமலை ஏறும்போது,சரணம் சொல்லுங்க
ஐயன் நேரில் வந்து அருள் புரிவான்,சரணம் சொல்லுங்க
(சாமிகளே)
பதினெட்டாம் படி ஏறி சரணம் சொல்லுங்க
கருப்பன் பாங்குடனே காத்திடுவான்,சரணம் சொல்லுங்க
(சாமிகளே)
மஞ்சள் மாதா சன்னதியில் சரணம் சொல்லுங்க
அம்மா மன இறங்கி அருள் புரிவாள் சரணம் சொல்லுங்க
(சாமிகளே)
வாவர்சாமி சன்னதியில்,சரணம் சொல்லுங்க
வாவர் வாஞ்சயுடன் காத்திடுவான்,சரணம் சொல்லுங்க
(சாமிகளே)
பக்தியுடன் கூடி கூடி சரணம் சொல்லுங்க
ஐயன் பஜனைக்கு வந்திடுவான் சரணம் சொல்லுங்க
(சாமிகளே) ஆமாம்
(சாமிகளே)
(சாமிகளே)

==================================================================

## தாலாட்டு பாடவா?

[தாலாட்டு பாடவா? தளந்தட்டி ஆடவா?
கோலாட்டம் அடிக்கவா? கும்மி பல கொட்டவா?]
அச்சன்கோயில் அரசனாம் - அச்சம் தீர்க்கும் அரசனாம்,
ஆரியங்காவு ஐயனாம் -ஆதரிக்கும் தெய்வமாம்,
(தாலாட்டு)

குளத்துப்புழை பாலனாம் - குறைகளையும் தீர்ப்பனாம்,
எரிமேலி நாதனாம் - எங்கள் குல தெய்வமாம்.
(தாலாட்டு)
வாவர் சாமி தோழனாம் - வன்புலியின் வாகனனாம்
காளைகட்டி நாதனம் - காத்தருளும் தெய்வமாம்,
(தாலாட்டு)
அழுத்தை மலை ஏற்றமாம - அழுதகை மலை இரக்கமாம்
கரிமலையின் ஏற்றமாம் - கரிமலையின் இரக்கமாம்
(தாலாட்டு)
சின்ன கருப்ப சாமியாம் - பெரிய கருப்ப சாமியாம்,
பதினெட்டாம் படி நாதன் - பக்தர் குறைதீர்ப்பனாம்.
(தாலாட்டு)
நெய்யபிஷேக பிரியனாம், நீல வஜ்ஜிரதாரியாம்,
மாளிகைபுரத்து அம்மியாம் - மஞ்சள் மாதா தேவியாம்.
(தாலாட்டு)
காந்தமலை ஜோதியாம் - காத்தருளும் தெய்வமாம்,
காந்தமலை ஜோதியாம் - காத்தருளும் தெய்வமாம்,
(தாலாட்டு) (தாலாட்டு) (தாலாட்டு)

==========================================================================

சுவாமியே சரணம் ஐயப்பா,
சுவாமியே சரணம் ஐயப்பா,
எரிமேலி தர்ம சாஸ்தாவே,
ஏழை பங்களியே,
ஆயின்கரன் தம்பியே,
ஓஓஓஓ
தன்னே நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,

ஆதியிலே தேவர் கூடி சரணம் ஐயப்பா...
ஆழி கடையும் பொது சரணம் ஐயப்பா....
நீதி அமுதும் கோண சரணம் ஐயப்பா...
நெஞ்சரக்கர் வேண்டும் என சரணம் ஐயப்பா..

சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ
மாலும் ஒரு பெண்னகியே சரணம் ஐயப்பா....
வல்லரக்கர் மாழசெய்ய சரணம் ஐயப்பா...
அங்கே சிவன் பெண்ணுரு கொண்டன சரணம் ஐயப்பா...
அன்பு திருமால் காட்டவே சரணம் ஐயப்பா....

சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,

ஈஸ்வரனும் மோகம் கொண்டு சரணம் ஐயப்பா...
இசையுடன் சேர்ந்திடவே சரணம் ஐயப்பா...
ஆசை மகனாக வந்த சரணம் ஐயப்பா...
ஆதவனை வென்ற ரூப சரணம் ஐயப்பா...

சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயுப்பா....
ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,

பூவர்களும் தேவர்களும் சரணம் ஐயப்பா...
முன் வணங்கி வாழ்த்திடவே சரணம் ஐயப்பா...

பாவ மகிஷமுகயை சரணம் ஐயப்பா...
பாழக்க வேண்டுமென்றே - சுவாமியே ...
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,

பந்தளது நாட்டு மன்னன் சரணம் ஐயப்பா..
பார்வண வேட்டை ஆட சரணம் ஐயப்பா..
வந்து-உன்னை கண்ணால் கண்டு சரணம் ஐயப்பா..
வாழ் மனைக்கு கொண்டு போக - சுவாமியே ..

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,
பிள்ளைக்குறை தீர்க்க வந்த சரணம் ஐயப்பா...
பேரின்பத்தின் பொருளே சரணம் ஐயப்பா...
சல்லிக்கலி தீருமென சரணம் ஐயப்பா...
தாய்-எடுத்து முத்தமிட - சுவாமியே ...

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,
போங்கயிலே பால் சுரக்க சரணம் ஐயப்பா...
கொஞ்சியே பாலூட்ட சரணம் ஐயப்பா...
மங்கலத்து ரூப தாயும் சரணம் ஐயப்பா...
மைந்தனையும் பெற்றெடுத்தாள் - சுவாமியே ..
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,
எந்த ஊரு எச்சாதியோ சரணம் ஐயப்பா...
இங்கிருக்க கூடாதென சரணம் ஐயப்பா...

மந்திரி தூர் போதனை சரணம் ஐயப்பா...
மாதாவும் நோவேனவே சுவாமியே ...
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நானனே நானனே,

புலியின் பாலை கேட்டிடவே சரணம் ஐயப்பா...
கள்ளத்தனம் கண்டுகொண்ட சரணம் ஐயப்பா..
நாட்டரசன் தந்தை-தன்னை சரணம் ஐயப்பா...
நல்-விடையும் குடுக்க செய்து சரணம் ஐயப்பா...

சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,

சித்திரனை வேங்கையக்கி சரணம் ஐயப்பா...
ஈறி வந்த கோடா-கோடி சரணம் ஐயப்பா...
வந்த புலி கூட்டம் கண்டு சரணம் ஐயப்பா...
நகரத்தாரும் பயந்திடவே

சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ ஓஓஓஓ
தன நன்னே நன்னே நான்னே,
தன நன்னே நன்னே நான்னே,

தந்தைக்கு-உபதேசம் செய்ய சரணம் ஐயப்பா...
சபரிமலை சேர்ந்து வந்தோர் சரணம் ஐயப்பா...
முக்தி தரும் தெய்வம் நீயே சரணம் ஐயப்பா...
மூவர்களும் கொண்டாடியே
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....
சுவாமியே ..சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா....

==============================================================

## தன்னானே நானே அவர் ஐயப்பா சாமி,

தன்னானே நானே அவர் ஐயப்பா சாமி,
தில்லே லேல்லோ அவர் சண்முக சாமி,
சபரியிலே இருப்பவராம் ஐயப்பா சாமி,
பழனியிலே இருப்பவராம் சண்முக சாமி,
(தன்னானே)
ஐந்துமலை அழகனாம் ஐயப்பா சாமி,
ஆறு படை வீடு கொண்ட சண்முக சாமி,

(தன்னானே)
வேங்கை புலி ஏறி வந்த ஐயப்பா சாமி,
அழகு மயில் அமர்ந்து வந்த சண்முக சாமி,
(தன்னானே)
கார்த்திகையில மாலை போடும் ஐயப்பா சாமி,
தை பூசம் கொண்டாடும் சண்முக சாமி, - போடு
(தன்னானே) போடு
நீல ஆடை அணிபராம் ஐயப்பா சாமி,
காவி ஆடை அணிபவராம் சண்முக சாமி,
(தன்னானே)
நெய்யபிஷேக பிரியனாம் - ஐயப்பா சாமி,
பஞ்சாமிரித்த பிரியனாம் சண்முக சாமி,
(தன்னானே)
இருமுடியை சுமப்பவராம் ஐயப்பா சாமி,
காவடியை சுமப்பவராம் சண்முக சாமி,
(தன்னானே)
துறவறத்தை பூண்டவராம் ஐயப்பா சாமி,
இரு தாரம் கொண்டவராம் சண்முக சாமி,
(தன்னானே)
வில்லெடுத்து நின்றவராம் ஐயப்பா சாமி,
வேலெடுத்து சென்றவராம் சண்முக சாமி, - போடு
(தன்னானே)
வாவரை துணை கொண்டவராம் ஐயப்பா சாமி,
வீரபாகுவை துணை கொண்டவராம் சண்முக சாமி, - போடு
(தன்னானே)
மகிஷி-தனை கொன்றவராம் ஐயப்பா சாமி,
சூரனையும் வென்றவனாம் சண்முக சாமி, -போடு
(தன்னானே)
காட்டினிலே கிடந்தவராம் ஐயப்பா சாமி
ஆறு-கமலத்திலே வளர்ந்தவராம் சண்முக சாமி
(தன்னானே)
அன்னைகுறை தீர்க்கவந்த ஐயப்பா சாமி,
தந்தைகுப தேசம் சொன்ன சண்முக சாமி,
(தன்னானே)
சபரிக்கருள் புரிந்தவனாம் ஐயப்பா சாமி,
இடும்பனுக்கு அருளியவனாம் சண்முக சாமி,
(தன்னானே)
மஞ்சமாதா தேவியருக்கு ஐயப்பா சாமி,
தெய்வானை வல்லிக்கு சண்முக சாமி, போடு
(தன்னானே)
(தன்னானே)...

==================================================================

**மலையும் மலையழகம் ஐயப்பா,**

ஓம் சாமியே... சரணம் ஐயப்பா,
ஓம் சாமியே... சரணம் ஐயப்பா,

சாமியே – ஐயப்போ , ஐயப்போ- சாமியே

பள்ளிக்கட்டு – சபரிமளிக்கு, சபரிமலைக்கு - பள்ளிக்கட்டு,
கற்ப்பூரஜோதி - சாமிக்கே , சாமிக்கே - கற்ப்பூரஜோதி

மலையும் மலையழகம் ஐயப்பா,
அந்த மலைய சுத்தி தொப்பழகாம் - ஐயப்பா)
செடியாம் செடியழகாம் ஐயப்பா- அந்த
செடிநிறைய பூவழகாம் ஐயப்பா - ஐயப்பா...
(மலையாம்)
மடிநிறைய பூ பறித்து ஐயப்பா- உன்
மலைய தேடி ஓடி வாரோம் ஐயப்பா
நாடிதேடி ஓடிவாறோம் ஐயப்பா - நீயும்
நல்லவரை காத்திடுவாய் ஐயப்பா - ஐயப்பா...
(மலையாம்)
பாசிபடர்ந்தமலை ஐயப்பா - அது
பனி படர்ந்த மூடு மலை ஐயப்பா
தூசி படர்ந்த மலை ஐயப்பா - நல்ல
ருத்ராட்சம் காய்க்கும் மலை ஐயப்பா - ஐயப்பா
(மலையாம்)
விரலாலே பூ எடுத்தால் ஐயப்பா,
வேம்பிவிடும் என நினைத்து - ஐயப்பா,
கையாலே பூ அடுத்தால் - ஐயப்பா,
அதன் காம்பு அழுகி போகுமென்று - ஐயப்பா -
பூவாலே பூ அடுத்தோம் ஐயப்பா -
பூ மாலைகள் செய்து வந்தோம் ஐயப்பா,
(மலையாம்)
வெள்ளி ஊசி கோண்டுபந்தோம் ஐயப்பா, நாங்கள்
விதவிதமாய் பூ தோடுத்தோம் ஐயப்பா - ஐயப்பா...
தங்க ஊசி கொண்டுவந்தோம் ஐயப்பா,
தனி தரமாய் பூ தொடுத்தோம் ஐயாப்பா,
(மலையாம்)
ஏறாத மலைதனிலே ஐயப்பா - நாங்கள்
ஏறி உன்னை காணவந்தோம் ஐயப்பா - ஐயப்பா...
(மலையாம்)
(மலையாம்)
(மலையாம்)

WWW. TAMILGOD .ORG

